விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 20 சனிக்கிழமை (02.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 104

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# ஐ.ம.சு. கூட்டமைப்பு அரசை கவிழ்க்க ஐ.தே.க. முயற்சி

## மக்களுடன் இணைந்து செயற்பட முடிவு

(நமது நிருபர்)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் நேர்மையற்ற நடவடிக்கைகளை மக்களுக்கு தெரியப்படுத்தி அதன் மூலம் அரசைக் கவிழ்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முடிவுசெய்துள்ளது.

அதற்காக எதிர்ப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (௨ ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இளைஞன் நேற்று சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட எம்மாபுரியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இளைஞர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் அதே இடத்தைச் சேர்ந்த புத்திரசிகாமணி குகபாலன் (வயது 23) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் தனது வீட்டிலிருந்து சைக்கிளில் ஆலயம் ஒன்றுக்கு சென்றுகொண்டிருக்கையில் வீதியில் வழிமறித்த இரண்டு இளைஞர்கள் சில நிமிடம் உரையாடிவிட்டு பின்பு இவரது தலையில் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் பொலநறுவையில் தங்கியிருப்பவர் என்றும் இடையிடையே தனது வீட்டிற்கு வந்து திரும்புவார் என்றும் தமது விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ச-4)

## ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பெண் தாக்கப்பட்டு நகைகள் கொள்ளை

### கந்தர்மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோவிலுக்குள் வைத்து வயோதிபப் பெண் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் அவரிடம் இருந்து 15 பவுண் பெறுமதியான நகைகள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு கந்தர்மடம் அரசடி செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தின்போது கந்தர்மடத்தைச் சேர்ந்த சித்திரவேல் இராஜேஸ்வரி (வயது 60) என்ற பெண் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, வெள்ளிக்கிழமையான நேற்று பிள்ளையாரைத் தரிசிப்பதற்காக பிரஸ்தாபப் பெண் பூவும் பாலும் கொண்டு சென்றுள்ளார். அங்கு சென்று வழிபட்ட பின் பிள்ளையாரை விழுந்து கும்பிட்ட சமயம் உள்ளே ஒளித்திருந்த இருவர் கோவில்மணிச் சங்கிலியை அறுத்து அவரை கடுமையாகத் தாக்கிவிட்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## எழிலன்–கண்காணிப்புக்குழு திருமலையில் நேற்று சந்திப்பு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையே நேற்று காலை முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் அண்மைக் காலமாக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள போர்நிறுத்தக் மீறல் சம்பவங்கள் குறித்து எழிலன் சுட்டிக் காட்டியதுடன் அச் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென எழிலன் கண்காணிப்புக் குழுவினரைக் கேட்டுக் கொண்டார். (ச-4)

## மின்சார, பெற்றோலிய துறைவிவகாரம்

## சுதந்திரக் கட்சி – ஜே.வி.பி விரைவில் சந்திக்க ஏற்பாடு

இலங்கை மின்சார சபையை மறுசீர ... வேண்டுமானால் அதற்குப் பதிலாக இரு

## கூட்டமைப்பு அரசு கலைக்கப்படாது

### மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்சியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஒருபோதும் கலைக்கப்படமாட்டாது. அது குறித்த நோக்கமோ எண்ணங்களோ கிடையாதென்று ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சர ... மைக்குப் புறம்பானதும் ஆதாரமற்றதுமாகும்.

இவ்வாறான சம்பவங்கள், செய்திகள் எமது கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும். அத்துடன் இது எதிர்க்கட்சிகளின் பிரசார நடவடிக்கைகளுக்கு துணைபோவதாக அமைகின்றது.

# சுதந்திரக் கட்சி – ஜே.வி.பி விரைவில் சந்திக்க ஏற்பாடு

இலங்கை மின்சார சபையை மறுசீரமைத்தல் மற்றும் திறைசேரி வசமிருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்குகளில் மூன்றில் ஒன்றை பாரத் பெற்றோலியம் நிறுவனத்திற்கு வழங்குதல் என்பன தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன.

இவ்விரு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமானால் அதற்குப் பதிலாக இரு மாற்று யோசனைகளை அரசு மக்கள் விடுதலை முன்னணிக்கு முன்வைத்துள்ளது. இலங்கை மின்சார சபைக்கு அரச வங்கிகளான மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியினால் வழங்கப்படும் கடனுதவிகளை நிறுத்துதல் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் மானியங்களை நிறுத்தல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்சியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஒருபோதும் கலைக்கப்படமாட்டாது. அது குறித்த நோக்கமோ எண்ணங்களோ கிடையாதென்று ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீர விடுத்த அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கூட்டமைப்பு அரசு தனது ஆட்சியை கலைக்கவுள்ளதாக நேற்று வெளியான ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது. அச் செய்தி உண்மைக்குப் புறம்பானதும் ஆதாரமற்றதுமாகும்.

இவ்வாறான சம்பவங்கள், செய்திகள் எமது கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும். அத்துடன் இது எதிர்க்கட்சிகளின் பிரசார நடவடிக்கைகளுக்கு துணைபோவதாக அமைகின்றது.

சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பெருமளவு வேலைத் திட்டங்களை இந்த ஒரு வருடகாலத்துக்குள் செய்து முடிந்துள்ளது. இந்த வேலைத்திட்டத்தில் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்களின் கொடுப்பனவுகள் அதிகரிப்பு ஆகியன அடங்குகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-8)

## 13 தேர்தல் தொகுதிகளின்

# ஐ.தே.கட்சி அமைப்பாளர்கள் இன்று கண்டியில் ஒன்றுகூடுவர்

(கண்டி)

ஐக்கிய தேசியக் கட்சியின் 13 தேர்தல் தொகுதிகளின் அமைப்பாளர்கள் இன்று கண்டியில் ஒன்றுகூடவுள்ளனர்.

இதன்போது எதிர்வரும் தேர்தல் ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுவது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் கெகலிய ரம்புக்வலவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் கெகலிய ரம்புக்வெல கருத்துத் தெரிவிக்கையில், இதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர் என்றும், கட்சியின் அடுத்தகட்ட தேர்தல் முனைப்புக்கள் குறித்து இவ் ஒன்றுகூடலில் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

(க-09)

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வடமராட்சி கிழக்கில் வீடுகள் கையளிப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் தும்பளைப் பகுதியில் சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு 105 வீடுகள் நேற்று கையளிக்கப்பட்டன.

'கியூடெக்' நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடுகள் கையளிக்கும் வைபவம் தும்பளை கிழக்கு உதயசூரியன் சனசமூக நிலைய செயலாளர் மா. மகேந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

வீடுகளை கடற்புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் நாடா வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் பொது ஈகச் சுடரினை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பனும், மங்கள விளக்கினை கியூடெக் நிறுவன மதகுருவும் ஏற்றி வைத்தனர்.

பாலர் பாடசாலை கட்டட தொகுதியை வடமராட்சி மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு திறந்து வைத்தார்.

(ச-35)


EXPOAIR யாழ்  கொழும்பு

தினசரி விமான சேவை

எக்ஸ்போ எயார்

T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

Your friend in the skies... E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi. com,

வானத்தில் உங்கள் நண்பன்...

# ஈழத்தமிழரின் இன்னல் நிலையை நேரடியாக அறிந்துகொள்ள விசேட குழுவை அனுப்புங்கள்!

## ஐ.நா.சபையில் திருமதி டியேற்றி மக்கோனால் கோரிக்கை

(சுவிஸ்)

**ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஆனால் அவற்றை இலங்கை அரசு கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. அவர்களின் நிலையை நேரடியாகக் காணச்சென்ற ஐ.நா.செயலாளர் நாயகத்தையும் தமிழர் பகுதிகளுக்கு அரசு அனுமதிக்கவில்லை.**

**ஆகவே ஐக்கிய நாடுகள் சபை தனது விசேட குழுவை இலங்கைக்கு அனுப்பி அங்கு ஈழத்தமிழர் படும் துயரை அறிந்து அதற்கு நிவாரணமளிக்க வேண்டுமென ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 61 ஆவது கூட்டத்தொடரில் சர்வதேச ஜனநாயக வழக்கறிஞர் சங்கம் சார்பில் உரையாற்றிய திருமதி டியேற்றி மக்கோனால் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் அங்கு ஆற்றிய உரையில் மேலும் கூறியதாவது,

இலங்கைத்தீவில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ மக்களுடைய அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும் மறுக்கப்பட்டு வருகின்றது. 1948 ஆம் ஆண்டு தொடக்கம் மொழி, கல்வி, நிலம், பிரஜாவுரிமை போன்ற பல விடயங்கள் சட்ட ரீதியாகவே மறுக்கப்பட்டுள்ளது.

நீதி, சமத்துவத்திற்கான தமிழ் மக்களுடைய சாத்வீகப் போராட்டங்களை 1956 ஆம் ஆண்டு முதல் அரச வன்முறையினால் பல இனக்கலவரங்கள் மூலம் அடக்கமுற்பட்ட காரணத்தினால், ஆயிரக்கணக்கான தமிழ மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இப்படியான அரச வன்முறைகள இறுதியில் தமிழ்மக்களை ஆயுதப போராட்டத்திற்கு இட்டுச்சென்றன.

கடந்த இருபது வருடகால யுத்தத்தினால் 79 ஆயிரத்திறகும் மேற்பட்ட தமிழ்மக்கள் கொல்லப்பட்டும், காணாமலும் போயுள்ளனர். ஐந்து லட்சத்திற்கும் மேறபட்டோர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர், 2 ஆயிரத்து 375 இற்கும் மேற்பட்ட கிறிஸ தவ தேவாலயங்களுஞ் சைவக் கோயில்களும் இலங்கைத் தீவின் தமிழர்களின் தாயக பூமியான வடக்கு -கிழக்கில் விமானக் குண்டுவீச்சினாலும், செல் தாக்குதல்களினாலும் அழிக்கப்பட்டுள்ளன.

கொலையும் பாலியல் வன்முறையும் இலங்கைப் பாதுகாப்புப் படைகளினால் ஆயுதமாகப் பாவிக்கப்பட்ட காரணத்தால், ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் பலவிதங்களில் கொடூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கொடூரச் செயல்களைக் கண்டித்து பல மனித உரிமை அமைப்புக்கள் குரல் கொடுத்த போதும் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் அரச மன்னிப்புடன் எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தப்படாது, தொடர்ந்தும் கொடூரப்படையாக செயற்படுகின்றனர்.

கடந்த மூன்று வருடகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இலங்கை அரசிற்குமிடையில் நடைமுறையில் இருந்துவரும் யுத்த நிறுத்தம், இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களுக்கு மட்டுமே பல நன்மைகளைக் கொடுத்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ள சரத்துகளுக்கு எதிராக செயற்படும் அரசபடைகள், தமிழ் மக்களை பல விதங்களில் கொடுமைப்படுத்தி வருகின்றன.

பாதுகாப்புப் படையினர் தேவாலயங்கள், கோயில்கள் பலவற்றிலிருநது தமது முகாம்களை விலக்கிக் கொண்டபோதும், இன்னும் பல இடங்களில் நிலை கொண்டுள்ளனர். அத்துடன் பாதுகாப்பு வலயம் என்று கூறி, போரினால் இடம் பெயர்ந்த மக்களை, இன்று பல வருடங்களாகியும் மீளச்சென்று தமது வடுகளில் வசிக்க அனுமதிக்கவில்லை.

வடக்கு-கிழக்கில் வாழும் மக்கள், இப் 'பாதுகாப்பு வலயங்கள்' யாருககு என வினவுகின்றனர். இவையாவும் இராணுவ மயப்படுத்தப்பட்ட வலயங்கள் என்பதே உண்மை.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம், அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு முன்னரே அரச தமிழ் கூலிப்படைகளைக் கலைத்திருக்க வேண்டியது கட்டாயம். ஆனால் இக்கூலிப்படைகள் இன்றும் அரச ஆதரவுடன் கிழக்கில் பல அரசியல் கொலைகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால் வடக்கு-கிழக்கு வாழ் மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையால் வடக்கு-கிழக்கே பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. இப்பிரதேசங்களில் 24ஆயிரத்து 500 இற்கு மேற்பட்டோர் இறந்தும், 10 ஆயிரத்திற்கு மேறபட்டோர் காணாமல் போயும், ஏறக்குறைய ஏழு லட்சம் பேர் இடம்பெயர்ந்தும் உள்ளனர். 1 இலட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேறபட்ட வீடுகள் அழிந்துள்ளன.

ஆனால் கடற்கொந்தளிப்பின் அனர்த்தங்களை பார்வையிட இலங்கைத்தீவிற்கு சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் அவர்களையே வடக்கு - கிழக்கிற்கு செல்லவிடாது இலங்கை அரசு தடுத்து நிறுத்தியுள்ளது.

இதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் உரிமைப்பத்திரத்தின் 100 ஆவது சரத்து, இலங்கை அரசினால் மீறப்பட்டுள்ளது.

ஆகையால், இந்த 61 ஆவது கூட்டத்தொடர் உடனடியாக ஓர்குழுவை இலங்கைக்கு அனுப்பி வைத்து அங்குள்ள உண்மை நிலைகளை அறிந்து, அங்கு பாதிக்கப்பட்ட மககளுக்கு உடன் நிவாரணம் வழங்க முன்வர வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன் என்று அவர் கூறினார்.

திருமதி டியேற்றி மக்கோனால் தமிழர் மனிதர் உரிமை மையத்தின் சர்வதேச இயக்குநர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## இராசி பலன்

**02.04.2005**
**பாங்குனி 20, சனிக்கிழமை**
**அட்டமி பிற்பகல் 4.23 மணிவரை**
**பூராடம் முன்னிரவு 07.18 மணிவரை**
**இராகுகாலம் 09.10 - 10.40 மணிவரை**
**சுபநேரம் 3.10 - 4.40 மணிவரை**
**அட்டமி -நவமி**

மேடம் — குடும்பக்கவலை, வேலைச்சுமை, உடல் வியாதி, முயற்சி தாமதம்.

இடபம் — எதிர்பாராத பிரச்சினை, தொழில் சிந்தை, காரியதடங்கல், மனக்கவலை.

மிதுனம் — மனோதைரியம், போசனசுகம், மாதர் நட்பு, காரிய அனுகூலம்.

கடகம் — தடைப்பட்ட காரியம் கைகூடும், சுப நிகழ்வு, ஆரோக்கியம், திடீர்பயணம்

சிங்கம் — காரியஇடையூறு, புத்திரரால் கவலை, உடல் நலக்குறைவு, பெரியோர் வெறுப்பு.

கன்னி — தனவிரயம், தாய்வழிஉறவு, ரோகநிலை, தொழில் ஆர்வம்.

துலாம் — கூட்டு முயற்சி, போசனசுகம், மனோ தைரியம், பிரயாணம்.

விருச்சிகம் — மனோசங்கடம், வீண்பகை, வேலைச் சுமை, பணவிரயம்.

தனுசு — நல்ல வரவேற்பு, புதிய தகவல், விருந்து பசாரம், காரிய சிந்தை.

மகரம் — சோம்பல் நிலை, பிரயாணம், சுபசெலவு, தொழில் விருத்தி.

கும்பம் — எடுத்தகாரியம் கைகூடும், கலந்துரையாடல், விருந்துபசாரம், கீர்த்தி.

மீனம் — அதிக பிரயாசை, சுபநிகழ்வு, காரிய சித்தி, நல்ல வரவேற்பு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வள்ளவன்

## நிவாரணத்தைப் பகிர்ந்தளிக்க தெளிவான முறைமையில்லை

(கொழும்பு)

சுனாமி போன்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை பகிர்ந்தளிக்கும் முறை குறித்து தெளிவான முறைமை எதுவும் இல்லையென பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறான அனர்த்தம் ஒன்றின் போதும், அதன் பின்னரும் ஏற்படும் நிலைமையை எதிர்நோக்குவதற்குத் தேவையான கட்டமைப்பொன்றினை ஏற்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒழுங்கற்ற நிலையிலேயே நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. ஆதலால் இவற்றை ஒழுங்கான முறையில் மக்களுக்கு வழங்கவேண்டுமாயின், நாம் செயற்படவேண்டிய முறைகுறித்து சிந்தித்துப்பார்க்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7-4)

## 1085 பட்டதாரிகளுக்கு அரச துறையில் உடனடி வேலைவாய்ப்பு

(கொழும்பு)

தொழில், தொழிற்பயிற்சி திறன் அபிவிருத்தி அமைச்சு நாட்டில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் ஆயிரதது 85 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கவுள்ளது.

மே மாதம் முற்பகுதியில் ஆயிரத்து 85 பட்டதாரிகள் அரசதுறையில் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள்.

திறன் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு 350 பேர் தெரிவு செய்யப்பட்டு நேரடியாக அமைச்சுத் தலைமையகத்தில் நியமிக்கப்படவுள்ளனர்.

432 பட்டதாரிகள் பயிற்சி உதவியாளராக தொழில் நுட்பக் கல்வித் திணைக்களத்தில் நியமிக்கப்பட்டு விரிவுரையாளராகவும், போதனாசிரியராகவும் செயற்படுவார்கள்.

தொழிற் பயிற்சி அதிகார சபையில் 157 பேரும் பயிலுநர் அதிகார சபையில் 85 பேரும் நியமிக்கப்படுவர்.

மேலும் தேசிய கைத்தொழில் கல்வி நிறுவகம் 30 கல்வி அலுவலர்களையும் 15 முகாமைத்துவ அலுவலர்களையும் அமைச்சு நியமிக்கவுள்ளது.

இதேவேளை, இவ்வருடமுடிவுக்குள் தொழில் நுட்ப பல்கலைக்கழகம் ஒன்றையும் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## முல்லைத்தீவில் 100 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர்

சுனாமி அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவில் 100 சிறுவர்கள் தமது தாய், தந்தையரை இழந்துள்ளதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் தாயை இழந்த 349 சிறுவர்களும் தந்தையை இழந்த 130 சிறுவர்களும் இருப்பதாக புள்ளிவிபர தகவல் தெரிவிக்கின்றன.

இதேவேளை சுனாமி தாக்கத்தின்போது 90 கர்ப்பிணித்தாய் மார்கள் இறந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

தாய்தந்தையரை இழந்துள்ள சிறுவர்களின் வாழ்கைத்தரத்தை உயர்த்துவதற்கு இதுவரை அரசு உரிய முறையில் சரியானநடவடிக்கைளை எடுக்கவில்லை என குற்றஞ் சாட்டப்படுகிறது. (7,9)

## நிவாரண மோசடியாளர்கள் முன் பிணை கோரி மனு தாக்கல்

(காத்தான்குடி)

ஆழிப்பேரலை நிவாரண மோசடியாளர்கள் என சந்தேகிக்கப்படும் சிவில் அதிகாரியொருவர் உட்பட 5 பேர் முன் பிணை கோரி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

காத்தான்குடி பிரதேசத்தில் சிவில் அதிகாரியாகப் பணியாற்றும் அதிகாரியொருவர் சமைத்த உணவு வழங்காமல் சுமார் 6 லட்சம் ரூபாவை உணவு வழங்கியதாகக் கூறி நிதி மோசடி செய்துள்ளதாக அந்த அதிகாரிக்கு எதிராக பொது மக்கள் தரப்பலிருந்து குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு அரசாங்க உணவுக் களஞ்சியத்திலிருநது காத்தான் குடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட 25 சாக்கு அரிசி மற்றும் 90 கலன் தாவர எண்ணெய் அடங்கிய 15 பெட்டிகள் ஆகியவற்றை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் வீட்டிலிருந்து இரவு நேர தகவலொன்றின் பேரில் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் எம்.ஐ.இப்ராகிம், அரசாங்கக் களஞ்சியப் பொறுப்பாளர் தம்பி மரிக்கார் ரசாக் மற்றும் இவரது நண்பர்களான உமர் லெப்பை, அக்பர் அலி, மொகமது காசிம், அப்துல் கபீர் ஆகியோர் பொலிஸாரால் விசாரணைக்காகத் தேடப்பட்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட நபர்களும் தமக்கு முன பிணை வழங்குமாறு கோரி சட்டததரணி ஊடாக நேற்றுமுன் தினம தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதிபதி எம.எச்.எம்.அஜ்மீர், இது தொடர்பான அறிக்கையுடன் பிரதிவாதியான காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை எதிர்வரும் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார். (7-8)

# போராளிகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்களை உடன்நிறுத்த வேண்டும்

## தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஒன்றியம் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை

(சாவகச்சேரி)

தமிழழ விடுதலைப் புலிகள் மீதும அப்பாவிப் பொதுமக்கள் மீதும் படையினர் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான தாக்குதல்களை உடனடியாக தடுத்து நிறுத்தவும் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை பெறுவதற்கும் சர்வதேச சமூகம உதவ வேண்டும் என தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

யுத்தததினால் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு உடனபடிக்கையும் யுத்த நிறுத்தமும் தமிழ் மக்களாகிய எமது வாழ்வில் எத்தகைய விடிவையும் தரவில்லை.

பதிலாக இவ்வாய்ப்பினைப் பயன்படுத்த இலங்கை அரசாங்கமானது யுத்தத் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும அதே வேளை அதன் இராணுவம் தேச விரோதக் குழுக்களை வளர்ப்பது அக்குழுக்களுக்கான முகாம்களை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வழங்குவது, அக்குழுககளுடன் சேர்ந்தும் தனித்தும் நிராயுதபாணிகளான விடுதலைப் புலி உறுப்பினர்களை படுகொலை செய்வது, நீதிகேட்டு ஜனநாயக வழியில் போராடும் பொதுமக்களைத் தாக்குவது என தமிழ்மக்களுக்கெதிரான தனது வழமையான அடாவடிததனங்களையும் அராஜகங்களையும் தொடர்ந்து அரங்கேற்றி வருகிறது அண்மைக்காலத்தில் இராணுவ அததுமீறல்கள் அதன் உச்சத்தை அடைந்துள்ளன.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில திட்டமிட்ட வகையில் விடுதலைபபுலி உறுப்பினர்கள படுகொலை செய்யப்படுவதும் தாக்கப்படுவதும் அதிகரித்துள்ளன. கௌசலயன் உட்பட பல போராளிகள் அண்மைக்காலத்தில் இராணுவத்தாலும் அதன் கூலிபபடைகளாலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

குயிலின்பன் உடபட பல போராளிகள், பொதுமக்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். ஆனால் தமக்கும் இவற்றுக்கும் எவ்வித தொடர்புமில்லையென முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்க எத்தனக்கும இராணுவத்தின் முகத்திரையை தீவுச்சேனை முகாம் சர்வதேசத்துகக் கிழித்துத் தெளிவாகக் காடடியுள்ளது என பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிடட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டோம் எனத் தேசியத்தலைவர் கூறியதும் இந்நடவடிக்கைகள் யுத்த நிறுத்தத்திற்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என அரசியல் பொறுபபாளர் கூறியதும் பேரினவாதிகளின் காதுகளில் கேட்காத சங்காகிவிட்டது. புலிகளும் தமிழமக்களும் மீண்டும் மீண்டும் பொறுமையைக் காத்துவரும் வேளைகளில் அவர்களை வலிந்து யுத்தததிற்கு இழுக்கும் முயற்சியில் சிங்கள அரசும் இராணுவமும் மிகத் தீவிரமாகச செயற்படுகின்றன என்பது இன்று எல்லோருக்கும் வெட்டவெளிச்சமாகிவிட்டது.

தமிழ் மக்களுக்கு எதையும வழங்கக்கூடாது, அவர்களை யுதத்தின் மூலம் அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்பதில் அரசும் இராணுவமும் உறுதியாகவே உள்ளன என்பதை அவற்றின் நடவடிக்கைகள் தெளிவாக்குகின்றது.

இத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் தென்மராட்சி மக்களின் சார்பில் தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது. அத்துடன் அரசின் கபட நாடகங்களை தற்போது படிப்படியாகப் புரிந்துகொள்ளும் சர்வதேச சமூகம் உடனடியாகத் தலையிட்டு இராணுவத்தின் இத்தகைய நடவடிக்கைகளை நிறுததுவதுடன் எமது நியாயமான உரிமைகளை பெறுவதற்கு உதவ வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது. (க-4)

## தேசியப் பாடசாலை அனுமதிக்கான

# விண்ணப்பம் நேரடியாக அனுப்பப்படவேண்டும்

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகளில் முதலாம் ஆண்டில் மாணவர்களை சேர்ப்பதற்காக விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் காலப்பகுதி இம்மாதம் 12 ஆம் திகதியுடன் நிறைவு பெறுகின்றது.

அததுடன் இம்முறை தேசிய பாடசாலைகளுக்கான விண்ணபபங்களை நேரடியாக கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் இது தொடாபான விபரங்களை தொலைபேசியூடாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

தினமும் காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 0773-16 6660 என்பதாகும்.

கல்வியமைச்சிடம் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் மேலதிகாரிகளின் மேற்பாாவையின் கீழ் கணனி மயப்படுத்தபபடும். விண்ணப்பஙகளின் அடிப்படையில் தெரிவுசெய்யபபடும மாணவர்களின் பெயா விபரங்கள் அடங்கிய பட்டியல் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இந்தப் பட்டியலின் அடிபபடையில் மாணவர்களை சேர்க்கும் பொறுப்பு அதிபர்களைச் சாந்தது. சமபந்தபபட ஆவணங்கள் உண்மையானவையா? என்பதையும் அதிபாகள் உறுதிசெய்ய வேண்டும்.

அதிபர்கள் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த நடைமுறை அமுலாக்கப்படுவதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (7-9)

# கைதுசெய்யப்பட்டு காணாமல் போனால் அதற்கு அரசாங்கமே நேரடிப் பொறுப்பு

## உயர் நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

கைதுசெய்யப்படுவோரின வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாப்பது அரசாங்கத்தின கடமை. அக கடமையிலிருந்து அரசு நழுவிசசென்றுவிட முடியாது என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை இராணுவ முகாமில் வைத்து கைதுசெய்யப்பட்டு, காணாமல்போன இளைஞர்கள் இருவர் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணையின் பின்னான தீர்ப்பின் போதே உயாநீதி மன்றம் இதனைத் தெரிவித்துள்ளது.

1990ஆம் ஆண்டு யூலை மாதம் 6ஆம் திகதி படையினரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் காணாமல்போன இவ் இளைஞர்களுக்கென தலா 3இலட்சம்ரூபாவை அவர்களது உறவினர்களிடம் வழங்க நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் கலாநிதி ஷிவானி பண்டாரநாயக்கா தலைமையிலான குழுவினா வழங்கிய தீர்ப்பில் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதன் பின்னர் அவர் காணாமலப் போனால் அதனை அரசாங்கமே நேரடியாகப் பொறுப்பேற்கவேண்டும.

1990ஆம் ஆண்டு காணாமல் போன திருகோணமலையைச் சேர்ந்த மச்சவல்லவன் ஆறுமுகம், மச்சவல்லவன் மகேந்திரரஜா ஆகிய இரு சகோதரர்களின தந்தை தாக்கல்செய்திருந்த மனு மீதான விசாரணை யின் போதே உயர் நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்திருக்கிறது. (7-8)


# சுவிஸ் நகரில் நடைபெற்ற "நாட்டிய மயில்-2005" நிகழ்வு

1998 ஆம் ஆண்டு சுவிஸில நாடு தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட பரதநாட்டிய எழுச்சி

முதலாம் நாள் நிகழ்வில் கீழ்ப்பிரிவுக்கான தனிநடனம் அ, ஆ, இ ஆகிய மூன்று பிரிவுக

யும் நடைபெற்றது. இதில் 17 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இவர்களிலிருந்து தெரிவு

# கட்டடத் திறப்பு விழாவும் சேவைச்சான்று வழங்கலும்



குறிப்பாக கிழக்கு மாகாணத் பதை அவற்றின் நடவடிக்கை ... னைத் தெரிவித்துள்ளது.

# சுவிஸ் நகரில் நடைபெற்ற "நாட்டிய மயில்-2005" நிகழ்வு

1998 ஆம் ஆண்டு சுவிஸில நாடு தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட பரதநாட்டிய எழுச்சி நடனபபோட்டி நிகழ்வான நாட்டியமயல் - 2005 நிகழ்வு எட்டாவது தடவையாக கடந்த 25ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன், தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் குலம் ஆகியோரின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகின.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பநடேசனின் ஆரம்ப வாழ்த்துரையைத் தொடர்ந்து தமிழர் நலன்புரிச்சங்க நடன






வகுப்பு மாணவர்களின் வரவேற்பு நடனம இடம்பெற்றது. தொடர்ந்து போட்டி நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

முதலாம் நாள் நிகழ்வில் கீழ்ப்பிரிவுக்கான தனிநடனம் அ, ஆ, இ ஆகிய மூன்று பிரிவுகளாக நடைபெற்றன. இதில் 61 மாணவர்கள் பங்குபற்றினர். அதனைத் தொடர்ந்து பாலர்பிரிவுக்கான குழுநடனம், மேற்பிரிவுக்கான தனி நடனம் என்பன நடைபெற்றன. இரண்டாம் நாள் நிகழ்வில் ஆரம்பப் பிரிவுக்கான தனிநடனம், அ, ஆ, இ ஆகிய 3 பிரிவுகளாகவும் மத்திய பிரிவுக்கான தனி நடனம் அ, ஆ ஆகிய இரண்டு பிரிவுகளாகவும், மேற்பிரிவுக்கான குழுநடனம் என்பன நடைபெற்றன. மூன்றாம் நாள் நிகழ்



வில் ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவுகளுக்கான குழுநடனம் மற்றும் சுவிஸ் நாட்டியமயில் 2005 சிறப்பு விருதுக்கான போட்டியும் நடைபெற்றது. இதில் 17 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இவர்களிலிருந்து தெரிவு செய்யபபட்ட ஒருவர் நாட்டியமயில் - 2005 என்ற சிறப்பு விருதைப்பெற்றுக் கொண்டார்.


நான்காம் நாள் நிகழ்வில் மத்திய பிரிவுக்கான குழுநடனம் எழுச்சி நாட்டிய நாடகம் என்பன நடைபெற்று மாலை 5.00 மணிக்கு பரிசளிப்பு ஆரம்பமாகி மாலை 8.00 மணிக்கு நிகழ்வுகள் நிறைவு பெற்றன.நான்கு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற இந்நிகழ்வில் சுவிஸிலுள்ள 10 நடனாலயங்களைச் சேர்ந்த 543 போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

283 போட்டி நடனங்கள் இடம்பெற்றுள்ளன. திருக்கோணேஸவர நடனாலய ஆசிரியை திருமதி சந்திரவதனி விஜயசுந்தரத்தின் மாணவி கஜானி சாந்த மூர்த்தி சுவிஸ் நாட்டிய மயில் - 2005 என்னும் சிறப்பு விருதைப் பெற்றுக்கொண்டார். எழுச்சி நாட்டிய நாடகத்தில் பரதாஞ்சலி நடனாலய மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். இதனைப் பயிற்றுவித்த ஆசிரியர திருமதி அனுஷியா சற்குணநாதன் சுவிஸ் நெருப்பின் சலங்கை 2005 என்னும் சிறப்பு விருதைப்பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வின் ஒருசில காட்சிகளை இங்கே காணலாம்.

(க)

# கட்டடத் திறப்பு விழாவும் சேவைச்சான்று வழுங்கலும்



(கிளிநொச்சி)

மகளிர் சிறுவர் மேம்பாட்டு ஒன்றியத்தினரால் மானிப்பாய் உடுவில் வீதியில் அமைக்கப்பட்ட மகளிர் சிறுவர் மேம்பாட்டு ஒன்றிய தலைமைச் செயலக கட்டடத்திறப்பு விழாவும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் முன்பள்ளி ஆசிரிய சேவையில் 25ஆவது ஆணடை நிறைவு செய்யும் ஆசிரியர்களுக்கான சேவைச்சான்றுகள் வழங்கும் நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை அன்று எஸ்.ஜே.செல்வராஜா தலைமையில் இடம்பெற்றது.

முதன்மை விருந்தினர்களாக தென்னிந்தியத் திருச்சபைப் பேராயா கலாநிதி எஸ்.ஜெபநேசன மற்றும் உடுவில் மகளிா கல்லூரி முன்னாள் அதிபரும் முகாமையாளருமாகிய செல்வி சி.வி.செல்லையாவும் கலந்துகொண்டு முதன்மை உரையினை வழங்கினர்.
சிறப்புரைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்ப்பாண மாவட்ட பணிப்பாளர் சு.ஜெயராஜ், முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் டி.ஆர்.அருமைநாயகம், திருநாவுக்கரசு ஆகியோர் நிகழ்த்தினர்.

மகளிர் சிறுவர் மேம்பாட்டு ஒன்றியத் தலைமைச் செயலக கட்டடத்தை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் திறந்துவைத்தார். 25 வருட ஆசிரிய சேவையினைப் பூர்த்திசெயத ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களையும், இலச்சினைகளையும் முதன்மை விருந்தினர்கள் வழங்கினர்.

(க-4)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 25



### அத்தியாயம் VIII

ஒரு நிலையியற் குழுவில் மேற்கொள்ளப்படும் நடைமுறைச் சட்டமூலங்கள் கூடிய ஆழமாக நுண்ணாய்வு செய்யப்படுதலை இயலச் செய்கின்றது. மாறாக முழுப் பாராளுமன்றக் குழுவானது சட்டமூலங்கள் கூடிய விரைவாக முடிவு செய்யப்படுதலை இயலச் செய்கின்றது.

*சட்டமான அதிபரின் பங்கு*

எல்லாச் சட்டமூலங்களும் அரசியலமைப்புக்கு இசைவானவையாவென்றும் ஏதேனும் சட்டமூலம் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டுமாவென்றும் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூற வேண்டிய கடமை சட்டமா அதிபருக்குண்டு. ஆயின் சட்டமா அதிபரின் கருத்துக்களால் பாராளுமன்றம் எவ்வகையிலும் கட்டுப்பட்டுள்ளதென்பது இதன் உட்பொருளல்ல. குழு நிலைத்திருத்தமொன்றின் விடயத்தில் சட்டமூலம் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்வைக்கப்படுகையில் சட்டமா அதிபர் அத்தகைய கருத்தைச் சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும் . சட்டமூலங்கள் மீதான நிலையியற் குழுக்களுக்கு அல்லது தெரிகுழுக்களுக்கு முன்னர் தோற்றுமாறும் சட்டமா அதிபருக்கு அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

### அத்தியாயம் IX

*நிதி நடைமுறை*

பகிரங்க நிதி தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள் xvii ஆம் அத்தியாயமாகத் தோற்றுவதுடன் அவை மிகச் சுருக்கமானவையும் கூட . எனவே வழக்கத்திலுள்ள பெரும்பாலான நிதி நடைமுறைகள் நிலையியற் கட்டளைகளிலிருந்தும் மரபுகளிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. இலங்கைப் பாராளுமன்றம் ஒற்றை அவையைக் கொண்ட ஒரு சட்ட சபையாதலால் அதன் நிதி நடைமுறைகள் நியாயமான அளவு எளிமையானவை. உறுப்புரை 148 அரசாங்க நிதி மீதான பு,ரண கட்டுப்பாட்டைப் பாராளுமன்றத்துக்கு உரித்தாக்குவதுடன் ஏலவேயுள்ள சட்டமொன்றின் அதிகாரத்தினால் அல்லது அதன் கீழ் தவிர உள்ளூரதிகார சபையினால் அல்லது ஏதேனும் பகிரங்க அதிகாரசபையினால் வரி வீதவரி அல்லது வேறு அறவீடு எதுவும் விதிக்கப்படுதலையும் தடை செய்கின்றது.

பகிரங்க நிதிகளில் எவ்வளவு தொகையை அரசாங்கம் செலவிடலாமெனப் பாராளுமன்றம் கட்டளையிட்டுக் கூறாத போதிலும் அரசாங்கம் அதன் உத்தேச செலவின முறையை மிக விரிவாகக் குறித்துரைக்க வேண்டுமென்பதுடன் பாராளுமன்றம் திருப்தியுறும் வகையில் அதனை நியாயப்படுத்தவும் வேண்டும். நிதி நடைமுறையானது திட்டமிடல் கட்டுப்பாடு பதில் சொல்லும் பொறுப்பு ஆகியவற்றை அளாவியதுடன் மதிப்பீடுகள். புதிய செலவினங்கள். வரிவிதிப்பு என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. பகிரங்க நிதியானது பணச் சட்ட மூலங்கள் வருடாந்த வரவு -செலவுத்திட்டம் குறை நிரப்பு மதிப்பீடுகள் பகிரங்க முதலீட்டு உடன் படிக்கைகள் குழு நுண்ணாய்வு (அரசாங்கக் கணக்குக் குழுவும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவும் என்பவற்றின் மூலமாகக் கையாளப்படுகின்றது.

*பகிரங்க நிதி பற்றிய முக்கிய கட்டளைகளாவன*

1. ஒரு குறிப்பிட்ட சேவைக்காக ஒதுக்கப்படும் தொகைகள் வேறொன்றுக்காகச் செலவிடப்படக்கூடாது.
2. ஒதுக்கப்படும் தொகை அனுமதிக்கத்தக்க அதியுச்ச தொகையாக இருக்கவேண்டும்.
3. பங்கிடப்பட்ட தொகைகள் அந் நிதியாண்டிற்குள் செலவிடப்படவேண்டும்.
4. தொகையை முறையாகப் பயன்படுத்தப்படாவிட்டால் அது திறைசேரிக்கு ஒப்படைக்கப்படவேண்டும்.

பகிரங்க நிதி தொடர்பில் பாராளுமன்றத்தின் உயர் மேலாண்மை நீதித்துறையினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்திச் சபைகள் பற்றிய சட்டமூலம் தொடர்பிலான தீர்ப்பில் உயர்நீதிமன்றம் விரும்பியவாறு வரிகளையும் வரி வீதங்களையும் அறவீடுகளையும் விதிப்பதற்கான பரந்த வரையறையற்ற அதிகாரம் இறைமையுள்ள ஒரு சட்ட சபையின் ஓர் உடைமையாகக் கருதப்படவேண்டுமென்றும் அத்தகைய அதிகாரத்தை வேறு ஏதேனும் நிறுவனத்துக்கு அளித்தலானது அரசியலமைப்பின் 76 ஆம் உறுப்புரையில் கருதப்பட்ட சட்டவாக்க அதிகாரத்தைத் துறத்தலாக அல்லது பராதீனப்படுத்தலாக அமைகின்றதென்றும் தீர்மானித்தது. அவ்வாறே வணிகசேகர எதிராக அரசு வழக்கில் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுவதற்கான அதிகாரத்தை நிதி அமைச்சருக்குக் கொடுக்க முனைந்த 1986 இன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை ஒரு பிரசை ஆட்சேபித்தார். அது பகிரங்க நிதி மீதான பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டை மீறுகின்றதென்றும் வலுக்குறைக்கின்றதென்றும் உயர்நீதிம்ன்றம் தீர்மானித்தது. நிறைவேற்றுத்துறையின் செலவினத்தின் மீது நிதிக்கட்டுப்பாட்டைப் பிரயோகிக்க வேண்டிய பாராளுமன்றம் அது மேற்பார்வை செய்ய வேண்டிய அதிகார அமைப்புக்குத்தானே அவ்வதிகாரத்தை ஒப்படைத்தலும் அவ்வதிகாரம் பயன்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்குப் போதிய வழிமுறைகள் வகுக்கப்படாமல் அவ்வாறு அதிகாரத்தை ஒப்படைத்தலும் ஒழுங்குமீறியதென நீதிமன்றம் தீர்மானித்தது. ஒதுக்கீட்டுச் சட்டத்துக்கான ஒரு திருத்தமாக பின்னர் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமூலம் உயர் நீதிமன்றத்தின் கருத்துக்களுக்காக ஜனாதிபதியால் ஆற்றுப்படுத்தப்பட்டது. திருத்துகின்ற சட்டமூலம் கடன்களின் வருமானத் திரட்டு தொகையை அதிகரிக்கும் நோக்குடையதாயிருந்ததால் அதனைப் பாராளுமன்றம் தானே செய்யவேண்டுமென நீதிமன்றம் கருதியது. எனவே அதில் அரசியலமைப்பு மீறப்படவில்லையென நீதிமன்றம் தீர்மானித்தது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (மார்ச் 2002) அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையால் பாராளுமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட பகிரங்க நிதி மீதான கட்டுப்பாட்டைத் துறப்பதற்கொப்பான ஓர் ஏற்பாட்டைக்கொண்டுள்ளதென்ற அடிப்படையில் அச்சட்டமூலமும் ஆட்சேபிக்கப்பட்டது. கேள்விக்குரிய வாசகம் வரிகளிலிருந்து பெறுகைகள் எதிர்ப்பார்க்கப்பட்ட தொகையை விடக் குறைவாக இருக்குமென அல்லது தொடக்கத்தில் ஒதுக்கப்பட்ட தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென்று நிதி அமைச்சர் திருப்தியடைவாராயின் எதிர்பார்க்கப்பட்ட வருவாயில் துண்டுவிழுந்த தொகையை ஈடுசெய்யும் பொருட்டு முன்னர் விடுவித்த தொகைகளை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு அவற்றை மீளப் பெறுவதற்கு அமைச்சருக்கு அதிகாரமளிக்க விழைந்தது. இவ் விடயத்தில் ஓரளவு இசைவிணக்கம் தேவையென்பதையும் அவ்வாசகத்தின் நோக்கம் பாராளுமன்றத்தால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு செலவினத்தை ஈடுசெய்வதற்கு அத்தகைய பணத்தை அமைச்சர் பயன்படுத்துவதற்கு இயலச்செய்வதென்பதையும் உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டபோதிலும் அத்தகைய நிதிகள் பாராளுமன்றத்தால் அதிகாரமளிக்கப்பட்ட விடயங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தப்படுவதற்குக் குறித்த ஏற்பாடு செய்யப்படவேண்டுமென விதித்துரைத்தது.

பெறுமதி சேர் வரி மீதான சட்டமூலம் (2002) அது வரி வீதங்களைத் தீர்மானிக்கும் உரிமையை நிதி அமைச்சருக்கு வழங்க முற்படுவதன் மூலம் பகிரங்க நிதி தொடர்பான விடயங்களில் பாராளுமன்றத்தின் உயர் மேலாண்மையைப் படிப்படியாக அழிக்கின்றதென்ற அடிப்படையில் ஆட்சேபிக்கப்பட்டது. உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்பை வழங்குகையில் மனுதாரரின் வாதத்தை ஏற்றுக்கொண்டு அம்முரண்பாட்டை நீக்கக்கூடிய திருத்தங்களை விதித்துரைத்தது.

அரசியலமைப்பு இரு பிரதான நிதியங்களை தாபிக்கின்றது. அவையாவன திரட்டு நிதியமும் எதிர்பாரச் செலவு நிதியமும் வேறு அரசாங்க நிதியங்கள் நியதிச்சட்டங்கள் மூலம் தாபிக்கப்படலாம். அவை அந்தந்த சட்டங்களின் ஏற்பாடுகளினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அத்தகைய நிதியங்களுக்குப் பணத்தொகைகள் எவ்வாறு திரட்டப்படுகின்றனவென்றும் அவை எவ்வாறு செலவிடப்படவேண்டுமென்றும் இச்சட்டங்கள் குறித்துரைக்கின்றன.

(தொ (ரும்)

# பாதிப்புற்றோருக்கு கரித்தாஸ் நிறுவனம் தொடர்ந்தும் உதவும்

பத்திரிகையாளர் சந்திப்பில் நிறுவனப் பிரதிநிதிகள் உறுதியளிப்பு





(யாழ்ப்பாணம்)

சுனாமி வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள அகில உலக கரித்தாஸ் நிறுவனத்தின் பொதுச் செயலாளர் பீற்றர் நேற்று முன்தினம் காலை பத்திரிகையாளர்களை சந்தித்து சுனாமி வேலைத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இக் கலந்துரையாடலில் கரித்தாஸ் நிறுவனத்தின் அபிவிருத்தி பொறுப்பாளர் அலோசியஸ் ஜோன், கரித்தாஸ் நிறுவனத்தின் சுனாமி வேலைத் திட்டத்தினுடைய யாழ். மாவட்ட இணைப்பாளர் மைக், கரித்தாஸ் நிறுவனத்தின பரதிநிதி டோமினி, யாழ்.மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி அந்தோனிமுத்து, கியூடெக் நிறுவனத்தின் இணைப்பாளர் வணபிதா ஜெயக்குமார் ஆகியோரும கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலின் போது அகில உலக கரித்தாஸ் நிறுவனத்தின் பொதுச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமி இலங்கையில் ஏற்படுத்திய தாக்கத்தை அறிந்த பிரான்ஸ் மக்கள் மிகவும் கவலையடைந்தார்கள்.

இலங்கையில் சுனாமி ஏற்பட்ட உடனே புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களே உடனடியாக தமது மக்களுக்கு உதவிகளை வழங்கினார்கள்.

அதனையடுத்து இலங்கையிலுள்ள நிறுவனங்கள் பலவும் முன்வந்து ஆரம்ப உதவிகளை மேற்கொண்டன. இதனையடுத்து வெளிநாட்டு நிறுவனங்களும் உதவிகளை வழங்கின.

மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர தேவைகள் பூர்த்தியாகியுள்ளதால் இனி இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் சுயதொழிலை செய்வதற்கு வழிவகுக்க வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் மேலும் தற்போதுள்ள சமாதானச் சூழ்நிலை வரவேற்கத்தக்க விடயம் என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து கரித்தாஸ் நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்,

கியூடெக் நிறுவனத்துடன் இணைந்து கரித்தாஸ் நிறுவனமானது 900 தற்காலிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

தற்போது 400 வீடுகள் அமைக்கும் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

இதைவிட பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி வள்ளங்களையும் இயந்திரங்களையும் மற்றும் வலைகள் என்பவற்றையும் வழங்கவுள்ளது. இதன் முதற்கட்டமாக 400 மீன் பிடி வள்ளங்கள் வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். இதைவிட நிரந்தர வீடுகளை தாம் அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளதாகவும் இதற்கான அனுமதியை அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உதவிகளை வழங்குதல், தொழில் சம்பந்தமான உதவிகளை வழங்குதல், பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஊக்குவித்தல், சுனாமியினால் உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்கல்,பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்கு உதவிகளை வழங்குதல் போன்ற வேலைத்திட்டங்களையும் தமது நிறுவனம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார். (க-19)

# வாகரையில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

இடைக்கால நிர்வாகத்தினை விடுதலைப் புலிகளிடம் வழங்க வேண்டும். பொதுக்கட்டமைப்பை உருவாக்கவேண்டும். சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் போன்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வாகரையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் 2 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர். பேரணியின் முடிவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான மகஜர்களை பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அரச அதிபரிடம் கையளித்தார். (ச-8)

# ஹெலிகொப்டர் விபத்தில் 2 மந்திரிகள் பலி

## சதி வேலையா என விசாரணை நடத்த உத்தரவு

சண்டிகரில் டில்லி புறப்பட்ட ஹெலிகொப்டர் விபத்தில் பயணம் செய்த 2 மந்திரிகள் பலியானதற்கு விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அரியானா மாநிலத்தில் மின்சாரத்துறை அமைச்சராக பதவி வகித்தவர் ஓ.பி.ஜிண்டல். 75 வயதான இவர் பிரபல தொழிலதிபர் ஆவார். இவரும் அரியானா விவசாயததுறை அமைச்சர் சுரேந்திரசிங்கும்



அரியானா முன்னாள் அமைச்சர் சுரேந்தர் சிங்கின் மரணமடைந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மனைவி கிரன்சி தனது மகளுடன் வந்த காட்சி.

(வயது 59) நேற்றுமுன்தினம் மதியம் சண்டிகரில் இருந்து ஜிண்டல் நிறுவனத்துக்குச் சொந்தமான ஹெலிகொப்டரில் புறப்பட்டனர். இந்த ஹெலிகொப்டரில் கர்னல் பி.எஸ்.சவுகான இயக்கினார். ஹெலிகொப்டரில் ஜிண்டலின் உறவினர் வேத் கோயல் மற்றும் பொலிஸ் ஏட்டு வினோத்குமார் ஆகியோரும் இருந்தனர்.

டில்லி செல்லும் வழியில் ஹெலிகொப்டரில் என்ஜின் திடீரென செயல் இழந்தது. இதையடுத்து ஹெலிகொபடர் நிலை தடுமாறத் தொடங்கியது.


ஹெலிகொப்டரை பத்திரமாகத் தரை இறக்க பைலட் சவுகான் தீவிர முயற்சி செய்தார். ஆனால் ஹெலிகொப்டரின் என்ஜின்கள் சரியாக வேலைசெய்யாததால் அந்த ஹெலிகொப்டரில் இறக்கைகள் சுழலவில்லை. இதனால் சர்வாசா என்ற கிராமத்தில் அந்த ஹெலிகொப்டர் தரையில் விழுநது நொறுங்கியது. இதில் ஹெலிகொப்டரில இருந்த அமைச்சர்கள் ஓ.பி.ஜிண்டல், சுரேந்தர்குமார் ஆகியோர் பரிதாபமாக மரணமடைந்தனர்.

விமானி சவுகான் உடபட விமானத்தில் இருந்த மற்ற 3 பேரும் படுகாயமடைந்தனர். இதுபற்றிய தகவல் கிடைத்ததும் பொலிஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்தனர்.

உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த 3 பேரும் சாஹரன்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லபபடடனர். ஆனால் வழியிலேயே பைலட் சவுகான் பரிதாபதமாக இறந்தார். படுகாயமடைந்த வேத் கோயல் மற்றும் பொலிஸ் ஏட்டு வினோத்குமார் ஆகியோருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

ஹெலிகொப்டர் விபத்தில் பலியான அமைச்சர்கள் ஓ.பி.ஜிண்டல், சுரேநதர்சிங் ஆகியோரது உடல்கள் சாஹரன்பூர் அரசு மருத்துவமனையில பிரேத பிரிசோதனை செய்யப்பட்டது. இந்த விபத்தில் பலியான அமைச்சர் ஓ.பி.ஜிண்டல் ஏற்கனவே காங்கிரஸ் சார்பில் எம்.பியாக இருந்தார். அரியானா சட்டசபை தேர்தலில் எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கபபட்டாா. ஹூடா அமைச்சரவையில் அவர் மின்சாரத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். ரூபா.10ஆயிரம் கோடி மிதிப்புள்ள ஜிண்டல் குழுமததைத் தொடங்கியவா் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் முதல் 12 பணக்காரர்கள் பட்டியலில் ஜிண்டலின் பெயரும இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. விபத்தில் பலியான மற்றொரு அமைச்சர் சுரிந்தர்சிங் அரியானா முன்னாள் முதல்வர் பன்சிலாலின் மகன் ஆவார். இவர் விவசாயிகள் தலைவராகத் திகழ்ந்தார். (து)



உலக வங்கி புதிய தலைவராக பால் உல்போவிட்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

# இந்தோனேசியாவில் தொடரும் பூகம்பம்

இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் இரண்டு முறை பூகம்பம் ஏற்பட்டது. இதனால், மக்களின் பீதி இன்னும் அதிகரித்துள்ளது.

இநதோனேசியா, சுமாத்ராதீவில கடந்த திங்கட்கிழமை 8.7 ரிக்டர் அளவில் பூகம்பம் தாக்கியது. அதன பாதிப்பு தொடர்கிறது. நியாஸ் தீவில் 2 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். மீட்புப் பணிகள் தீவிரமாக நடக்கின்றன. இடிபாடுகளில் சிக்கியுள்ள பிணங்களை மீட்கும் பணி, மூன்று நாட்களுக்குப் பின் நேற்றுத்தான் தீவிரமடைந்தன.

மூன்று மாதங்களில் இரண்டாவது மிகப் பெரிய பூகம்பத்தை சந்தித்ததால் இந்தோனேசிய மக்கள் பெரும் பீதியில் உள்ளனர். வீடுகளுக்குச் செல்லவே பயப்படுகின்றனர். அவர்களைப் பூகம்பம் தினமும வந்து மேலும் மிரட்டிக் கொண்டிருக்கிறது.

திங்கட்கிழமை முதல் நேற்று வரை சுமாத்ரா தீவை 20 பூகம்பங்கள் வரை உலுக்கி விட்டன. நேற்று முன்தினம் இரண்டுமுறை பூகம்பம் ஏற்பட்டது.

சுமாத்ரா தீவின் வடக்குப் பகுதியல் இந்தப் பூகம்பங்கள் ஏற்பட்டன. ஏழு மணி நேரம் இடைவெளியில் இவை தாக்கின. முதல் பு,கம்பம் காலை 5.11க்கு 5.1ரிக்டர் அளவில் ஏற்பட்டது. இரண்டாவது பூகம்பம் பகல் 12.54க்கு ஏற்பட்டது. 5.4ரிகடர் அளவில் இருந்தது. (து)

# விசாரணையை வேறு மாநிலத்துக்கு மாற்ற சங்கராச்சாரியார் மனு



கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கு விசாரணையை வேறு மாநிலத்துக்கு மாற்றக் கோரி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் உச்ச நீதிமன்றத்தல் மனு தாக்கல் செயதுள்ளார்.

இந்த வழக்கின் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு 70 நாட்கள் ஆன நிலையில் அதன் நகல்கள் சங்கராச்சாரியாா உள்ளிட்ட 24 பேருக்கு காஞ்சிபுரம் நீதிமன்றத்தல் நேற்றுமுன்தினம் வழஙகப்பட்டது.

சங்கரராமன் கொலை வழக்கில் சங்கராச்சாரியார்கள் ஜெயேந்திரர், விஜயேந்திரர் உள்ளிட்ட 25 போ கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஒப்பந்தகாரர் ரவி சுப்பிரமணியம் அரசு தரப்புச் சாட்சியாக மாறியதையடுத்து மற்ற 24 பேர் மீதும் கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் 1843 பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரிகை தாக்கல செய்யப்பட்டது.

இந்நிலையில் பிணையில் விடுவிக்கப்படட ஜெயெந்திரர், விஜயேந்திரர் உள்ளிட்ட 5 பேர் காஞ்சிபுரம் முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நேரில் ஆஜராகினர். சென்னை மத்திய சிறையிலிருந்து விஜயேந்திரரின் தம்பி ரகு, சங்கரமட மேலாளர் சுந்தரேச ஐயர் உள்ளிட்ட 18 பேரும் கடலூர் சிறையிலிருந்து அப்புவும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு நீதிபதி உத்தமராஜ் குற்றப்பத்திகைகளை வழங்கினார். அத்துடன் வரும் 5ஆம் திகதி விசாரணை தொடங்கும் என்றும் கூறினார்.

இதனிடையே இந்த வழக்கு விசாரணையை வேறு மாநிலத்துக்கு மாற்றக்கோரி உச்ச நீதிமன்றத்தில் ஜெயேந்திரர் மனுதாக்கல் செய்துளளார். அதில் முதலமைச்சரும் அவரது அரசும் இந்த வழக்கில் தனி அக்கறை காட்டுவதாக அவர் குறிப்பிட்டுளளாா. வழக்கினை வேறு மாநிலத்துக்கு மாற்றினால்தான் விசாரணை நேர்மையாகவும சுதந்திரமாகவும் நடைபெறுமென்றும் தமது மனுவில் ஜெயேந்திரர் கூறியுள்ளார். (து)

# இடிபாடுகளில் சிக்கிய இருவர் உயிருடன் மீட்பு



இந்தோனேசியாவின் நியாஸ் தீவில் நிலநடுக்கத்தால் இடிந்த கட்டடங்களின் இடிபாடுகளில் சிக்கி இருந்த 19 வயது இளம் பெண்ணையும் 15 வயது சிறுவனையும் மீட்புப்படையினர் கடந்த வியாழக்கிழமை மீட்டனர்.

இடிந்துபோன கட்டடத்திலிருந்து அந்த ஒரு பெண் மட்டுமே மீட்கப்படடார். அவருடன இடிபாடுகளல் சிக்கய மற்ற அனைவருமே இறந்துவிட்டனர். நிலநடுக்கத்தில் இடிந்த 5மாடிக் கட்டடத்தின் 3ஆவது மாடியல் இடிபாடுகளில் சிறுவன் சிக்கிக் கிடந்தான். அந்தச் சிறுவனின் உடம்பில துளி காயமும் இல்லாதது அனைவரையுமே வியப்படையச் செய்தது.

இதனிடையே இடிபாடுகளில் சிக்கித் தவிப்போரை உயிருடன் மீட்க மீட்புப்படையினர் முழுவீச்சில் செயல்பட்டு வருகின்றனர். (து)

## மனிதர்களைத் துப்பறியும் ரேடார்

மனிதர்களைத் துப்பறியும் ரேடர்களை முதல் முறையாக சீன அரசின் பொதுமக்கள் பாதுகாப்புத்துறை கண்டுபிடித்துள்ளது. ஜிங்க்ஷி-1 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ரேடார், பக்கத்து அறையில் உள்ள நபர்கள் எத்தனைபோ், என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று துப்பறிகிறது. (து)

# பாப்பரசர் உடல்நிலை கவலைக்கிடம் வத்திக்கான் தகவலால் மக்கள் அதிர்ச்சி

84 வயதான இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் உடல்நிலை மிகவும் மோசமான நிலைக்குச் சென்றிருப்பதாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறுநீரில் கிருமி படர்ந்ததால் அவரது உடலில் காய்ச்சல் உருவாகியுள்ளதாகவும், ஏற்கனவே இரு தடவை அடுத்தடுத்து சத்திரசிகிச்சைக்குள்ளானதால் நோய்வாய்ப்பட்டிருந்த உடலில், இது அதிக உபாதைகளை உருவாக்கியுள்ளதாகவும் தெரிகிறது.

தற்பொழுது அவரது உடல் நிலையில் திடீர் மந்தநிலை ஏற்பட்டுள்ளது. கத்தோலிக்க மதத்தில் உயிருக்கு ஆபத்துள்ள நேரத்தில் வழங்கப்படும் தேவதிரவிய அனுமானமான அவஸ்தை பூசுதல் வழங்கப்பட்டதால், மரணம் சம்பவிக்க வாய்ப்புள்ளது என்று அர்த்தப்படாது.


முன்னர் ஒருதடவை பாப்பரசர் துப்பாக்கியால் சுடப்பட்டபோதும் 1981ஆம் ஆண்டு இந்தப் பாப்பரசருக்கு அவஸ்தைபூசுதல் வழங்கப்பட்டது.

26வருடங்கள் பாப்பரசராக இருக்கும் இவர் உலக சமாதானத்திற்காகவும், ஐரோப்பாவின் எழுச்சிக்காகவும மிகக் கடுமையாக உழைத்து வெற்றி பெற்ற ஒருவராகக் கருதப்படுபவர்.

வரலாற்றிலேயே மிக அதிகமான பயணங்களை மேற்கொண்ட ஒரு பாப்பரசராகவும், மிக அதிகமான மக்களைச் சந்தித்த ஒருவராகவும் இவர் விளங்குகிறார்.

போலந்து நாட்டில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த கரோல் வொஜ்ரைலா என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் மிகச் சிறந்த ஒரு மாணாக்கராக விளங்கியதுடன், பின்னர் இவர் 11 மொழிகளில் அனாயாசமாகப் பேச எழுதத் தெரிந்ததுடன் இன்னும பல மொழிகளை ஓரளவு அறிந்தவருமாவார்.

தற்போது பார்க்கின்சன் நோயி



னால் பாதிக்கப்பட்ட பாப்பரசர் இம்மாதம் 14ஆம் திகதியுடன் வரலாற்றில் அதிக காலம் பாப்பரசராக பணியாற்றிய மூன்றாவது பாப்பரசராக உருவாவார். (து)



கம்போடியா நாட்டில் 15 இலட்சம் பேரின் மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கம்போடியா நாட்டை ஆண்ட ஹூமீர் ரோச் என்ற அரசர் காலத்தில் கம்போடியாவைச் சேர்ந்த 15 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். இவர்களது உடல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டன. தற்போது இந்த உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டது. இதில் எடுக்கப்பட்ட 15 இலட்சம் பேரின் மண்டை ஓடுகள் அனைத்தும் தற்போது ஒரே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

# 4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே பூமி கடுமையான நிலையிலேதான் இருந்தது

பூமியின் மேல் பிறழ்ச்சித் தட்டு கள கடினமானதும், எரிமலை வாயுக் கள் கலந்த முகில் மண்டலம் சூழ ந்து நீர் ஆவி பரவியது! அவற்றின் வெப்பம் தணிந்ததும் பெரு மழை கள பெய்ய ஆரம்பித்து, குழிந்த பரப்புக்கள் யாவற்றிலும் நீர் தங்கி கடறபகுதிகள் உண்டாயின.

உயிரினத் தோற்றத்தைப் பற்றி விளக்கவேண்டுமானால் அவற்றின் மூலகாரணமான இரசாயன சேதனப் பொருடகளான புரதங்கள், நியூக்கிளின் அமிலங்கள் ஆகிய இரண்டும் எவ் விதம் பூகோளத்தில் உண்டாயின வென்று முதலில் ஆராய்ப்படவேண டும்.

தற்போது ஆய்வகத்தில் ஓர் ஆர்கானிக் இரசாயனவாதி உயிரின உற்பத்திக்கு வேண்டிய முக்கிய உபரிச்சாதனங்களை முறையாகச் சேர்த்து யாவருக்கும் செய்துகாட்ட முடியும்! ஆனால் அந்த மூலப் பண் டங்கள் பூகோளத்தில் எப்படித் தானாக உணடாயின என்று கூறுவதுதான் மிக்க சிரமமாக இருக்கிறது.

மனித இனங்கள் தோன்றுவதற் கும் நீண்டகாலத்துக்கு முன்பு பூத ளம் எங்கும் இயற்கையின மகத்தான படைப்புக்களைக் காட்ட புதைந்த எலும்புகளையும், பூர்வபடிவத் தடங் களையும் விட்டுச்சென்ற விந்தை யான விலகினங்கள் கம்பீரமாக உலவி வந்தன. பறப்பது, நகர்வது, விரை வது, நீந்துவது போன்ற திறமை கள் பெற்று ஊர்ந்துசெல்லும் பூத



கரமான விலங்கினங்கள் தக்கமுறை யில் வாழும் சூழ்வெளி நிலைக் கேறபமாறும் தகுதி பெற்று, அனைத தும் அழிவதற்கு முன்பு 135 மில்லி யன் ஆண்டுகள் பூதளத்தை ஆண்டு வந்தன.

4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னே, இந்தப் பூகோளம் நாம றிந்தது போலின்றிக் கடூரமான சூழ் நிலையைக் கொண்டிருந்தது! பெரும் பான்மையான பிரதேசங்கள் நீர்மய மாக மூழ்கிக் கிடந்தன. தளப் பகுதி கள எங்கும் மலைப்பாறைகள் சூழ் ந்து, எரிமலைகள் குமுறி எழுந்து தடுப்புப் பீடங்களாய்ப் பிழந்தும், அப் பாறைகளைப் புயல், காற்று, பனிப் புயல், மழை அடுத்தடுத்து அரித்தும், சரித்தும் மாறி மாறி நிகழ்ந்து வந் தன! உயிரினங்கள் எவையும் மூச் செடுத்து உயிர் வாழாவண்ணம், பிராண வாயுவற்ற, சூழ்வெளியில் வெறும் ஐதரசன், மெதேன், அமோ னியா, நீராவி மட்டும் பரவியிருந்தன. அந்தப் பயங்கரப் பலனற்ற பூதனச் சூழ்வெளியில்தான் முதன் முதல் இரசாயன இயக்கங்கள் உண்டாகிப் படிப்படியாக உயிரினத் தோற்றங்கள் உதயமாயின!

எளிய இரசாயன கூட்டியக்கங்கள் மின்னல், ஒளிச்சேர்க்கை போன்ற இயற்கையின் வினை ஆக்கிகளால் மாறுபாடுகள் அடைந்து உயிரினங் கள தோன்ற மூலகாரணிகளை உண் டாக்கின என்பது சமீபத்தில் க்ண்டு பிடிக்கப்பட்டது.

உயிரினத் தோற்றங்களின் ஆதிக் கோட்பாடுகள் பல்வேறு கருத்துக்கள கொண்டவை. கண்ணுக்குப் புலப் படாத உயிர்க்கிருமிகள் இயறகை யாகவே உதித்தன என்பது ஒரு கோட பாடு. அந்த நியதியை ஆதரிப்போர் அழுகிப்போன பிண்டத்திலிருந்து உயிர்கள் நேரடியாக உண்டாயின வென்று நம்பினர். அதை மெய்ப்பிக் கும் வகையில் நீரில பக்டீரியா எழு வதும், புழுத்துப்போன இறைச்சியில் மாக்கட் ஈசல், புழுக்கள் உற்பத்தி யாவதும் காட்டப்பட்டன.

1860 இல் பிரெஞ்ச் விஞ்ஞானி லூயி பாஸ்டர் (1822-1895) மெய் வருத்திப் பல சோதனைகள் செய்து உயிர்கள் தாமாகவே தோன்றின எனனும் கோட்பாட்டை நிராகரித்தார்.


அதேசமயத்தில் பிரிட்டனில் சார் லஸ் டார்வின் (1809-1882), ஆல்.. பிரெட் வால்லஸ் (1823-1913) ஆகி யோர் இருவரும் பலர் ஒப்புக்கொள்ளும் தமது உயிரின மலர்ச்சி நியதியை 1858ஆம் ஆணடில் லின்னியன் இணைக குழு முனபாக ஒருங்கே அரங்கேற்றினர்.

பூகோளக் கண்டங்களின் பூர் வகத் தோற்றமும் மறைவும் துவக்க காலத்தில் எல்லாவற்றுக்கும் முன்ன தாகத் தோன்றிய பூதக்கண்டம் "ரொடினியா" 750 மில்லியன் ஆண் டுகளுக்குப் பிறகு துண்டுகளாகப் பிரிய ஆரம்பித்து அவற்றின் இடையே பிரமாண்டமான கடற்பகுதிகள் எழுந் தன. அப்போது ஒரு பகுதி வடதுரு வத்தை நோக்கியும், மறுபகுதி தென் துருவத்தை நோக்கியும் நகர்ந்தன. குன்றுகள் உயர்ந்தன. பூமத்தியரேகைப் பகுதியில் உள்ள மலைச்சிகரங் களில் கூட பனிமூட்டம் பெருகிற்று.

வடக்கில் சென்ற துண்டுக் கண் டங்கள் ஆபிரிக்கா கண்டம் மீது மோதின. 600 மில்லியன் ஆண்டுக ளுக்குள் மீண்டும் துண்டுகள் இணை ந்து "பன்னோசியா" என்னும் பூதக் கண்டம் உருவானது.

550மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே "பாலியோஸோலிக்" யுகத் தில் வட அமெரிக்காவின் மகத்தான செம்பாறைப் பள்ளத்தாக்கு யூரோ அமெரிக்காவின் ஒரு பகுதியாக இருந்தது.

514 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பன்னோசியாவின் ஒரு பகுதி பிரிந்து, கோந்துவானப் பெருங்கண் டம் தென் துருவத்திலே விடப்பட் டது. வட அமெரிக்காவின் மேற்குக் கரை 90 பாகை சாய்ந்து, பூ மையக கோடு மீது படிந்திருந்தது! அலைகள் உள்நுழைந்தும், வெளியேறியும் கடறகரைகள் அடிக கடி வெள்ளத்தில மூழ்கின. கடலில் வாழும் டிரைலோ பைட்ஸ் பூர்வபடி வங்கள் தோன்ற ஏதுவானது. கடற் தள ஜந்துகளின் பூர்வ படிவங்களும் காணப்பட்டன. பாலி யோஸோலிக் யுகத் தின் இறுதியில் கண டங்கள மீண்டும் சேரத்துவங்கி பாங் கியா பெருங்கண டம் உருவானது.



390 மில்லியன ஆண்டுகளுக்கு முன்பு லெளரென் சியா (வட அமெ ரிக்கா), பால்டிகா (வட ஐரோப்பா) கண டத்துடன் மோதியது. பின்னால் அவலோ னியா பிரிட்டன், நியூ இங்கிலாந்து பகுதியுடன் மோதியது. கண்டங்கள் மோதிச் சுருங்கியபோது, கடல் தடாகங்கள் அகன்று கடலில் ஆழம குறைந்து, பல நிலப்பகுதிகள் தெரியும்படித் தலைதூக்கின! அப் போது நதிகளும், ஏரிகளும் உப்புநீர்க கரை அரண்களை இழந்தன. இனி ப்பு நீர் மீன்கள் விடுதலையாகப் புலம பெயர்ந்தன. பயிரினங்கள் நிலத்தில் குடியேறின. பின்னால் கார் பன நிரம்பிய பயிரின வகை புதை பட்டுப் போய், சூழ்வெளியில் காபனீ ரொட்சைட்டு அளவு குன்றி பூமியின் உஷ்ணநிலை குறைந்தது.

300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, கோந்துவான கண்டமும் வட கண்டங்களும் மோதி, "பங்கயா" என னும் ஒற்றைப் பெருங்கண்டம் சேர் ந்து, வடதுருவம் முதல் தென்துரு வம் வரை பரவிய மாபெரும் நிலப் பகுதி உருவானது! அவற்றிடையே ஏற்பட்டது டெதிஸ்கடலான மத்திய தரைக்கடல. அப்பெருங் கண்டத்தைச் சுற்றியிருந்தது பந்தலாஸிக் கடல். அதுவே இப்போதைய பசிபிக் கடலா னது.

பாந்தகன்ற கடலின் ஆழம் குறைந்து, வட தென் நிலப்பகுதிகள ஒட்சிசன் உள்ள கடலோட்டத்தைத் தடுத்து நிறுத்தியது. பிராணவாய குறைந்து போனபோது சைபீரியா வல் பலத்த பயங்கரமான எரிமலை கள் கொட்டிய தீக்குழப்பாலும் 250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு மாபெரும் பிரளயம் ஏற்பட்டுப் பேர ழிவு நிகழ்ந்திருககும். என்று விஞ் ஞானிகள் ஊகிக்கின்றார்கள்.

அப்பெருஞ்சிதைவில் தபபிப் பிழைத்த ஊர்வன விலங்குகளே பங்கயா கண்டத்தில் பரவி, வேறு பட்ட விலங்கினங்களாக மாறி, டைனோஸர்ஸ் பிறப்பதற்குக் கார ணமாயின என்று கருதப்படுகிறது.

(தொடரும்)

## திறைசேரிக்கு செலுத்தும் வரியை பெற்றோலிய கூ.தாபனம் நிறுத்தியது

(கொழும்பு)

திறைசேரிக்கு இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனம் செலுததி வந்த வரியை நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோல், டீசல் மண்ணெண் ணெய் போன்றவற்றிற்கு திறைசேரி வழங்கிவந்த மானியத்தை நிறுத்தி யதையடுத்து பெற்றோலியக் கூட்டுத் தாபனம் திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய வரியை செலுத்தவில்லை என மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துளளார்.

திறைசேரி இதுவரை ஒரு லீற் றர் பெற்றோலுக்கு 6 ரூபாவும், ஒரு லீற்றர் டீசலுக்கு 8 ரூபாவும், மண் ணெண்ணெய்க்கு 14 ரூபாவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மானியமாக வழங்கிவந்தது. எனி னும் கடந்த ஒக்டோபர் மாதம் முதல இம்மானியம் வழங்கல் நிறுத்தப் பட்டது.

இந்நிலையில், எரிபொருளை குறைந்த விலையில் வழங்குவது கடினமாக இருப்பதனால், எரிபொருள் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருவாய்க்கு அறவிடப்படும் வரியைச் செலுத்தாது விட நடவடிக்கை எடுக் கப்பட்டதாக அமைச்சா மேலும் தொ வித்துள்ளார்.

இதுவரை ஒரு லீற்றர் பெற் றோலுக்கு 20 ரூபாவும், ஒரு லீற்றர் டீசலுக்கு 2 ரூபாவும் வரியாகச் செலுத் தப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கது. (ச-7)

## அரிசியைப் பயன்படுத்தி பாண் தயாரிப்பு?

(கொழும்பு)

அரிசியைய பயன்படுத்தி பாணை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்நுட் பத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஜப பான் விருபபம் தெரிவித்துள்ளது.

அண்மையில் அமைச்சர் அனு குமார திஸ்ஸநாயக்காவைச் சந்தித்த ஜப்பானிய தூதுக்குழுவினா இந்த விடயம் தொடர்பான தொழில்நுட் பங்களைப் பெற்றுத்தர இணங்கியிருக் கின்றார்கள்.

அண்மையில் இலங்கை வந்த ஜப்பானிய நிபுணர்கள் சிவப்பு அரிசி, வெள்ளை அரிசி ஆகியவற்றின்மூலம் தயாரிக்கப்பட்ட பாண் உணவின் மாதிரிகளைக் கொணடுவந்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

அரிசியைப் பயன்படுத்தி பாணைத் தயாரிக்கும் தொழில்நுட் பத்தை இலங்கையில் அறிமுகப் படுத்தும் நடைமுறை விவசாய அமைச் சினால் கையாளப்படவுள்ளது.

அதன் முதற்கட்டமாகப் பேக்கரி உரிமையாளர்களின் நலன்கருதி கண காட்சிகளும் நடத்தப்பட இருக்கின் றன.

எனவே, நெல் உற்பத்தியை அதி கரிப்பதோடு அரிசியைப் பயன்படுத் தித் தயாரிக்கப்படும் உப உணவு களைப் பிரபல்யம் அடையச்செய்வதே விவசாய அமைச்சின் நோக்கமாகும். (க-9)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

T.P: 222 3226


## சந்தேக நபர் விளக்கமறியலில்

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி ஆறுமுகத்தான் குடியிருப்பில் கடந்த புதனன்று ஈ.பி.டி.பி உறுப் பினர்கள் பயணம்செய்த வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாககிச் சூடு மற்றும் கைக்குண்டுத் தாக்குதல சம்பவம் தொடர்பாக இளைஞரொரு வர் சந்தேகத்தின் பேரில் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொத்துவிலைச் சேர்ந்த யோக ராஜா கமலக்கண்ணன் (வயது 23) என்ற இளைஞரே அவரது சகோத ரியின் வீட்டிலிருந்தபோது கைது செய்யப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பான விசாரணை யின் பின்பு இவர் நேற்றுமுன்தினம் மடடக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோது மேலதிக நீதி பதி எம்.எச்.எம்.அஜ்மீர் எதிர்வரும் 15ஆம் திகதி வரை அவரை விளகக மறியலில் வைக்குமாறு உத்தர விட்டுள்ளார். (7-8)

## விசனம்

(ஒஸ்லோ)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தாக் குதல்கள் குறித்து நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம், தமி ழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேரில் தனது விச னத்தைத் தெரிவித்தார்.

வியன்னாவில் கடந்த புதன் கிழமை எரிக்சொல்ஹெய்மைச சந தித்த சு.ப.தமிழ்ச்செல்வன், யுததநிறுத்த ஒப்பந்த மீறல்கள் குறித்துத் தமது கவலையைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகங்கள் மற் றும் ஆயுதமேந்தாத விடுதலைப் புலிப போராளிகள்மீது அண்மை யில் நடத்தப்பட்ட தாக்குதல்களையும் அவர் விவரித்தார்.

இச்சந்திப்பின்போது ஆழிப் பேரலை மீள் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பு உருவாக்குவது தொடர் பான நடவடிக்கைகள குறித்தும் இரு தரப்பினரும் விவாதித்தனர். (க)

## வேலைப்பட்டறை

(கிளிநொச்சி)

முன்பள்ளி கல்வி வேலைப்பட் டறை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், போரூட் நிறுவனமும் இணைந்து வடக்கு கிழக்கு மாகாண முன் பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையம் ஊடாக முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர்களுக்கான வேலைப் பட்டறை ஒன்றை நடைமுறைப் படுத்தி வருகின்றன.

போரூட் நிறுவனத்தின் முன்பள் ளிக கல்வித் தொடர்பாளர் திருமதி. தயாமோகன் இவ்வேலைத்திட்டப் பட்டறையை நெறிப்படுத்தி வருகி றார். (க-4)

## தகவல் தொழில்நுட்ப பரீட்சைகள்

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டில் நடைபெற வுள்ள கல்விப் பொதுத்தராதர பரீட் சைக்கு தோற்றுபவர்களுக்கு தக வல் தொழில்நுட்ப பரீட்சைகள் நடை பெறவுள்ளன.

இதனைக் கல்வி அமைச்சின் செயலாளர் தாராமெல் அறிவித்துள ளார். அதன்படி இந்தப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடை பெறவுள்ளது.

இதவேளை, இந்தப் பரீட்சை க்குத் தோற்றுபவர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப் பிக்குமாறு பரீட்சைத் திணைக்களம கேட்டுள்ளது. (க-9)

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியின் அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையா டல் இன்று மு.ப.10.30 மணிக்கு யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட துறைசார்ந்த திணைக்கள அதிகாரி கள், மாவட்ட செயலக அதிகாரி கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு தென் மராட்சி பொது அமைப்புக்கள் பிரதி நிதிகள், கிராம பிரதிநிதிகள், ஆகி யோருடன அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர். (க)

# விலை நிர்ணயத்திலுள்ள தவறே வரி செலுத்தாததன் காரணம்

## ஜாலிய மெதகம தெரிவிப்பு

(கொழும்பு)

உலக சந்தையின் விலைகளுக்கேற்ப, நாட்டில் எரிபொருட்களின் விலை தீர்மானிக்கப்படாததன் காரணமாகவே, அரசிற்கு வரி செலுத்தமுடியாத நிலையேற்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகம தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த விலையை விட குறைவான விலைக்கு எரிபொருட்களை விற்பனை செய்வதற்கு, திறைசேரி தமக்கு வழங்கும் மானியங்கள் உரிய நேரத்தில் வழங்கப்படுமானால் இந்த நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது.

திறைசேரியிடமிருந்து கடந்த 6 மாதங்களுக்கான 7 ஆயிரம் மில்லியன் ரூபா மானியம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

நாம் குறைந்த விலைக்கு எரிபொருட்களை விற்பனை செய்தால் விலையில் பாரிய இடைவெளியேற்படும். இந்த இடைவெளி அரசாங்கததிற்கு செலுத்த வேண்டிய வரித்தொகையாகும்.

அரசுக்கு வரி செலுத்த முடியாத நிலையை நாம் கூறுகின்றோம். இந்த விலை சரியான முறையில் கணிப்பிடப்படாததன் காரணமாகவே கடன் ஏற்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதத்தின் பின்னர் இந்தக் கடன்சமன்பாடு உரிய முறையில் இடம்பெறவில்லை.

இந்நிலையில் திறைசேரியிடமிருந்தோ அல்லது அது தொடர்பான நிறுவனங்களிடமிருந்தோ கிடைக்கவேண்டிய மானியங்கள் கிடைக்கவில்லை.

இதன் காரணமாகவே வரி செலுத்த முடியவில்லையென ஜாலிய மெதகம மேலும் தெரிவித்துள்ளார். (7-8)

# ஊழியர்கள் ஓய்வு பெற நட்டஈட்டுத் திட்டம்

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச சபையை மத்திய போக்குவரத்துச சபையாக மாற்றுவது தொடர்பாகப் போக்குவரத்து அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இதற்குத் தேவையான சட்ட மூலம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கலாநிதி டி.எஸ்.ஜெயவீர தெரிவித்தார்.

இதற்குப் புதிய ஊழியர்களை இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையில் சுமார் 40 ஆயிரம் பேர் தற்போது கடமையாற்றுகின்றார்கள்.

தற்போதைய செயற்பாடடிற்கு 16 ஆயிரத்து 500 ஊழியர்கள் மாத்திரமே தேவையென அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி மேலதிகமாகவுள்ள ஊழியர்களை ஓய்வு பெறச் செய்வதற்காக விசேட நட்டஈட்டு முறையொன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் ஜெயவீர மேலும் தெரிவித்திருக்கிறார். (7-9)

# கட்டடம் அமைத்துத் தருமாறு பாடசாலை சமூகம் கோரிக்கை

கடந்த சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள மணற்காடு றோ.க.த.க.பாடசாலை தறபோது மணற்காட்டு மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள குடத்தனை இடைத்தங்கல் முகாமிற்கு அண்மையில் உள்ள தனியார் ஒருவருடைய காணியில் செயற்படுகின்றது.

கூரை விரிப்புக்களின் கீழேயே (பிளாஸ்ரிக் தறப்பாள்கள்) கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான கற்பித்தற் செயற்பாட்டில், பல்வேறு துன்பங்களை இப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவாகள் எதிர்நோக்குகின்றனர்.

ஏனெனில் தற்போதைய காலப் பகுதி கடுமையான வெப்பமான தாகையால் இந்த விரிப்புகளின் கீழ் கற்பிக்கும் ஆசிரியர்களும், கற்கும் மாணவர்களும், கடும் வெப்பக் கொடுமையை நாளாந்தம் அனுபவித்து பல்வேறுபட்ட நோய்களுக்கு உட்படுகின்றார்கள். அத்துடன் இவ் விரிப்புகள் பூவரசம் மரத்திற்கு அருகாமையில் இருப்பதனால் மயிர்கொட்டி புழுக்களின் தொல்லைகளும் அதிகமாக உள்ளது.

இவ்வாறு இன்னல்களை எதிர்நோக்கும் இப்பாடசாலைக்கு தற்காலிக பாடசாலைக் கட்டடத்தை அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைபபுக்களுக்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் பாடசாலைச் சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-101)

# பாராளுமன்ற தெரிவுக்குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை முன்விசாரணை செயவதற்காகப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

இத் தெரிவுக்குழு சம்பந்தமான பிரேரணைகள் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் பிரேரணையில்13 பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்தத் தெரிவுக்குழு பிரதானமாக 5 முக்கிய பிரச்சினைகள் குறித்து விசாரனைகளை மேற்கொள்ளவுள்ளது. இவற்றுல் நிதி நடவடிக்கைகளின் வெளிப்படைத தன்மை, இலங்கையின் இறைமை, தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் விதத்தில் அரச சார்பற்ற நிறுவணங்கள் செயற்படும் முறை, அவற்றின் நடவடிக்கைகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பன குறித்து இந்தத் தெரிவுக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும்.

அத்துடன் அது தொடர்பான அறிக்கையையும் இக்குழு பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-8)

# பூமியதிர்ச்சி தகவல்களை ஜப்பான் உடனே வழங்கும்

(கொழும்பு)

இந்துசமுத்திரத்தில் பாரிய பூமியதிர்ச்சி ஏற்படுமானால் அது சம்பந்தமான தகவல்களை சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் உடனடியாக வழங்குவதற்கான வழிமுறைகளை ஜப்பானிய வளிமண்டல நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சினூடாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையொன்றில் இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, கென்யா போன்ற 25 நாடுகளும் இந்தத் தகவலை கோருகின்றனவா? என்றும அதில் கேட்டிருக்கின்றது.

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் வழங்கப்படவிருக்கும் தகவல்களின் அடிப்படையில், இந்து சமுத்திரத்தில் ரிக்டர் கருவியில் 6.5 என்றளவுக்குப் பூமயதிர்ச்சி ஏற்படுமானால் இரு நாடுகளையும் அது தாக்கக்கூடிய நேரம் மற்றும் அதன் தாக்கம் பற்றியும் அறிவிககப்படும் என ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (7-9)

# முன்னறிவித்தலின்றி கட்டணம் உயரும்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரித்தால் எதுவித முன்னறிவித்தலுமின்றி சிற்றூர்திக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என சிற்றூாதி உரிமையாள் சங்கத்தின் தலைவா ஹெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில் தமது செலவுகள் அனைத்தும் அதிகரித்திருப்பதாகவும், எரிபொருளின விலையும் அதிகரித்தால் நிச்சயமாகக் கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (7-4)

## சுனாமி நிவாரணப் பகிர்வில்

# ஒருதலைப்பட்சமாக அரசாங்கம் நடந்துகொள்வது வருந்தத்தக்கது

(யாழ்ப்பாணம்)

தடுப்பு முகாம்களிலும், குடிசைகளிலும் வசித்துவரும் மக்களின் நிவாரணம், புனருத்தாரணம், மீள்குடியமர்வு போன்றவற்றை ஒருதலைப்பட்சமாக அரசாங்கமே பொறுப்பேற்றுச் செய்து வருவ்து வருந்தத்தக்கது.

சர்வதேச சமூகத்திடமிருந்து வந்து குவியும். நிவாரண உதவிகளைக் கூட்டமைப்பொன்றின் மூலம் பாதிக்கபபட்டவர்களுக்குப் பகிந்தளிக்க வேண்டுமென தமிழீழ விடுதலைப்புலிகள் வற்புறுத்தி வந்த போதிலும் அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தாது இவ்வுதவிகளைப் பகிர்ந்தளிப்பதில் ஒரு தலைப்பட்சமாகவே நடந்து கொள்கிறது.

இவ்வாறு ஐரோப்பிய ஆணைக் குழுவின் தலைவருக்கு மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திககுமான தமிழ் பேசும் மக்களின் அமையம் அனுப்பிய மகஜரில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது. அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

நோர்வே நடுநிலையாளர்களால் கடுமையான முயற்சிகள் மேற கொள்ளப்பட்டபோதிலும் இலங்கை அரசு கூட்டமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வருகிறது.

இதேவேளை, இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு கரையோரப்பகுதிகளில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமில்லாமல் அனைவருக்கும் பாரிய உயிர், உடைமை சேதங்களை ஏற்படுத்திய சுனாமியின் கோரத் தாண்டவம் முடிந்து மூன்று மாதகாலமாகிவிட்டது.

இம் மனித அழிவுகள் இலங்கை அரசினால் மனிதாபிமான முறையில் நோக்கப்படாமல் அரசியல் நிகழ்ச்சி நிரலிலுள்ள ஒரு விடயம் போலவே கவனிக்கப்படுகிறது.

அரசு இயந்திரங்களால் நிவாரணம், புனருத்தாரணம், மீள்குடியமர்வு என்பன தென் பகுதியில் முழு வீச்சுடன் செய்யப்படும் நேரத்தில் இவ்வுதவிப் பணிகள் வட கிழக்கு அகதிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயத்தை மனிதாபிமான முறையில் அணுகி தாமதமில்லாமல் கூட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐரோப்பிய சமூகம் மேற்கொள்ளவேண்டும்.

இம் மகஜர் மேற்படி அமையத்தின் ஒருங்கிணைப்பாளரால் ஒப்பமிடடனுப்பப்பட்டுள்ளது. (து)

# யாழ்.மாவட்டத்தில் 39,769 வாகனங்கள் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டுள்ளன

## மோ. போ. உ. ஆணையாளர் பத்மநாதன் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் வரை சட்டரீதியாகப் பதிவுசெய்யப்பட்டு 39அயிரத்து 769 "வாகனங்கள் உபயோகத்தில்" உள்ளதாக யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வபத்மநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சட்டரீதியாக பதிவுசெய்யப்பட்டு உபயோகத்தில் 31 ஆயிரத்து 308 மோட்டார் சைக்கிள்களும், 2ஆயிரத்து 167 கார்களும், ஆயிரத்து 695 உழவு இயந்திரங்களும், 910 கை உழவு இயந்திரங்களும், ஆயிரத்து 199 மோடடார் லொறிகளும், 656 மோடடார் கோச்களும் (பஸ்), ஆயிரத்து 315 முச்சக்கர வண்டிகளும், 519 இரட்டைப் பயன்பாட்டு வாகனமும உள்ளதாகத் தெரிவித்தார்.

இதைவிட 2004ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் வாகன அனுமதிப்பததிரம் பெறுவதற்கு விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சை, செயல் முறைப்பரீட்சைக்கு தோற்றி இவ்விரு பரீட்சைகளிலும் சித்திபெற்ற 4ஆயிரத்து 684பேருக்கு யாழ். மாவட்ட மோட்டார் போககுவரதது அலுவலகத்தினால் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட புதிய மோட்டார் சைக்கிள்களுக்கான வாகன இலக்கத் தகடுகளும், பதிவுப் புத்தகங்களும் 2003ஆம் ஆண்டு மேமாதம முதல் யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தினால் வழங்கப்பட்டுவருகின்றன.

அதாவது புதிதாக மோட்டார் சைக்கிள்களை வாங்குபவர்கள உரிய ஆவணங்களுடன் யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தில் பதிவுசெய்தால் இரண்டு வாரங்களில் வாகன இலக்கத்தகடுகளும், பதிவுப் புததகங்களும் வழங்கப்படும்.

2004ஆம் அண்டு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தினால் 2ஆயிரத்து 232 புதிய மோட்டார் சைக்கிள்களுக்கு வாகன இலக்கத் தகடுகளும், பதிவுப் புததகங்களும் வழங்கபபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-19)

# சகோதரனைக் காணவில்லை; ம. உ. ஆ. குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

சகோதரனைக் காணவில்லையென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

இருபாலை வி.ஏச்.ஒழுங்கையைச் சோந்த இராசரட்ணம் தயாபரன் (வயது 21) என்பவரைக் கடந்த மாதம் 23ஆம் திகதியிலிருந்து காணவில்லையென அவரது சகோதரி தயானந்தினி கடந்த மாதம் 24 ஆம் திகதி மனித உரிமைகள ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது சகோதரர் கடந்த 23 ஆம் திகதி காலை கடைக்குச் சென்று கடையில் பொருட்கள் வாங்கிவிட்டு வருவதாகச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லையென முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (க-19)

# வாழ்க்கைச் செலவு 15வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த மூன்று மாதங்களுக்குள வாழ்க்கைச் செலவு மட்டும் 15 சதவீதத்தால் அதிகரித்திருககின்றது என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவின் இவ்வாறான அதிகரிப்பினால் மக்களின் வாழ்க்கையின் மீது பாரிய சுமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஆனால் அரசாங்கமோ இந்த வடயங்களின் தொடர்பில் கவனம செலுத்தாமல் ஜனாதிபதியை மீண்டும் பதவிக்குக் கொண்டு வருவதற்காக ஆராய்ந்து கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டாா. (க-4)

# உ.கிழங்கு செய்கையில் நோய்த் தாக்கம்

(இணுவில்)

யாழ்.மாவட்ட விவசாயிகள் பலர் இம்முறை பெருமளவில் மேற்கொண்ட உருளைக்கிழங்கு செய்கை பெரும் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது.

குறிப்பாக நீர்வேலி, இணுவில், உடுவில், குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் போனற இடங்களில் பயிரிடப்பட்ட கிழங்குகள் அழுகல் நோய்த் தாக்கத்திற்கும் எரிவு நோய்த் தாக்கத்திற்கும் உட்பட்டதால் விவசாயிகள் பெருமளவு நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இம்முறை நடப்பட்ட விதை கிழங்குகள் தரம் குறைந்ததாகவும் பழுதடைந்தும் காணப்பட்டமையே இப்பாதிப்புகளுக்கு காரணமென விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (7-122)

# கௌசல்யனின் பயணம், பாதுகாப்பு தொடர்பாக பொலிஸாருக்கு எந்த தகவலும் வழங்கப்படவில்லை

## வெலிக்கந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியம்

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த கௌசல்யனின் பயணம் தொடர்பாகவோ அல்லது அவரது பாதுகாப்புத் தொடர்பாகவோ பொலிஸாருக்கு எவரும் தகவல் தெரிவிக்கவில்லை என வெலிக்கந்த பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியசட்சகர் எம்.கே. தயானந்த தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் சம்பவங்களின பின்னணி பற்றி ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் கடந்த புதன்கிழமை சாட்சியமளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தலைமையிலான இந்த ஆணைக்குழுவின் முதலாவது அமர்வின் இரண்டாவது நாள் விசாரணை அம்பாறை நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

ஆணைக் குழுவினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த சாட்சி, இந்த வாகனத்தில் சம்பவ தினம் அதாவது கடந்த பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி அவருடன் ஐந்து விடுதலைப் புலி உறுப்பினர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம், இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் வாகன சாரதியும் பயணம் செய்தனர். நான்கு விடுதலைப் புலி உறுபபினர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுபபினர் மற்றும் வாகனச் சாரதி என மொத்தம் ஆறு பேர் குறிப்பிட்ட தாக்குதலில் கொல்லப்பட்டார்கள். ஏனைய மூவரும் காயமடைந்தார்கள்.

சம்பவதினம் காலி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையொன்றிற்காக நான் ஆஜராக வேண்டியிருந்ததால் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக நேரடியாகச் சென்று என்னால் அந்த இடத்தில் விசாரணைகளை மேற்கொள்ள முடியவில்லை. அரலகங்வில உதவி பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஏ.பெர்ணாண்டோ பதில கடமையாற்றியதால் அவரே நேரில் சென்று விசாரணையை நடாத்தினார் எனத் தெரிவித்தார். சாட்சியமளிப்பதற்கு அவரும் அங்கு சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆணைக்குழு: பொலிஸ் யாருக்கு பாதுகாப்பு வழங்கியது?

சாட்சி: முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் தனது பாதுகாப்பிற்காக திருக்கோவில் பொலிஸ் நிலையத்திலிருந்து இவர்களைப் பெற்றிருந்தார்.

ஆணைக்குழு: முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸ பாதுகாபபு வழங்கப்படுவது உண்டா?

சாட்சி: அது வழமை அல்ல. தேவை ஏற்பட்டால் வழங்குவது உண்டு. இதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியிருக்கலாம்.

ஆணைக்குழு: சம்பவதினம் இவர்கள் எங்கே இருந்து பயணத்தை ஆரம்பித்தார்கள்?

சாட்சி: வவுனியாவிலிருந்து ஒரு வாகனத்தில் புறப்பட்ட இவர்கள் பொலநறுவையிலிருந்து மற்றுமொரு வாகனத்தில் மாறி மட்டக்களப்பு நோக்கி சென்ற சமயம் பிள்ளையாரடி என்னும் இடத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆணைக்குழு: இந்த பயணத்திற்கான பாதுகாப்புப் பற்றி தங்களுக்கு அறிவிக்கப்பட்டதா?

சாட்சி: இல்லை.

ஆணைக்குழு: சம்பவத்திற்கு முன்பு ஏதாவது ஒரு சோதனைச் சாவடியை இவர்கள் கடந்து சென்றார்களா?

சாட்சி: ஆம் வெலிக்கந்தை சந்தி பொலிஸ் சோதனைச் சாவடியை இவர்கள் தாண்டிச் சென்றுள்ளார்கள்.

ஆணைக்குழு: குறிப்பிட்ட சோதனைச் சாவடியிலிருந்து சம்பவம் இடம்பெற்ற இடம் எவ்வளவு தொலைவிலுள்ளது?

சாட்சி: மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

ஆணைக்குழு: முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸார் ஆயுதம் வைத்திருந்தார்களா? அப்படியானால் அந்த ஆயுதம் எங்கே?

சாட்சி: ரி-56 ரக துப்பாக்கி வைத்திருந்தார்கள். அது தற்போது பொலிஸ் பாதுகாப்பில் உள்ளது.

ஆணைக்குழு: குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை தற்போது எந்நிலையிலுள்ளது? சாட்சிகளின் வாக்குமூலங்களில் என்ன கூறியுள்ளார்கள்?

சாட்சி: காயமடைந்து உயிர் தப்பிய இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களான கந்தையா சந்திரசேகரன, சுப்பிரமணியம் நாகராசா மற்றும் விடுதலைப் புலி உறுப்பினரான வினோத் எனப்படும் கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி ஆகியோரின் வாக்குமூலத்தின் படி இவர்களது வாகனத்தை பின்தொடர்ந்து வந்த மற்றுமொரு வாகனத்தில் வந்தவர்களே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளார்கள். துப்பாக்கிதாரிகள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

ஆனால் வினோத் என்பவர் தனது வாக்குமூலத்தில் கருணா குழுவினர் தான் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இது யாரால் செய்யப்பட்டது என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஆணைக்குழு: இவர்களின் வாக்குமூலங்களின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதியை ஆணைக் குழுவிற்கு வழங்க முடியுமா?

சாட்சி: ஆம், இதோ சமர்ப்பிக்கின்றேன்.

ஆணைக்குழு: காயமடைநதவர்களான இந்த சாட்சிகள் தற்போது எங்கே இருக்கின்றார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா?

சாட்சி: மூன்று பேரும் வைத்திய சாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக அறிகின்றேன்.

ஆணைக்குழு: எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்களை தடுப்பதற்கு உங்களால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

சாட்சி: எமது வெலிக்கந்த பொலிஸ் பிரதேசத்தில் தற்போது 21 இராணுவ காவலரண்களும் 20 பொலிஸ் காவலரண்களும் அமைக்கப்பட்டுள்ளது. சகல வாகனங்களும் சோதனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு: உமது பொலிஸ் பிரிவில் கருணா குழுவின் நடமாட்டம் உண்டா? அவர்களது முகாம்கள ஏதும் உண்டா?

சாட்சி: மட்டக்களப்பு, பொலநறுவை மாவட்ட எல்லையைக் கொண்ட எமது பிரதேசத்தில் கருணா குழுவின் நடமாட்டம் உண்டு. ஆனால முகாம்கள் எதுவும் இல்லை.

ஆணைக்குழு: சம்பவ தினம் விடுதலைப் புலிகள் பயணம் மேற்கொண்ட வாகனம் மீது தாக்குதல் மேறகொள்ளப்பட்ட இடம் இராணுவ கட்டப்பாட்டுப் பகுதியா?

சாட்சி: ஆம்.

ஆணைக்குழு: விசாரணை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தது. (7-4)

# விடுதலைப்புலிகளைச் சீண்டி யுத்தத்திற்கு வலிந்து இழுக்க அரசு முயற்சிக்கின்றது !

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தொடரும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களை அவதானிக்கின்றபோது அரசு புலிகளை யுத்தத்திற்கு வலிந்து இழுப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது எனவும,

சமாதான நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டிவரும் விடுதலைப் புலிகளை சீண்டி மீண்டும் போரை ஆரமபிக்கவேண்டும்'என்பதில் அரசு ஆர்வம் காட்டிவருவதை தாம் அவதானித்துவருவதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டு படுகாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலானது நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமே இல்லை. ஏனெனில இந்நாடகத்தை ஆரம்பிப்பதற்காகத் திட்டமிட்டபடி மண்டானா அகதிகள் முகாமில் வைத்து விசேட அதிரடிப்படையினர் போராளி ஒருவரைக் கைது செய்ததோடு தாக்குதலும் நடத்தினர்.

போராளி கைது செய்யப்பட்டமையும், தாக்கப்பட்டமையும் குயிலின்பனை அதிரடிப்படையின் திட்டமிட்ட ரீதியில் அப்பகுதிக்கு வரவழைக்க மேற்கொண்ட நடவடிக்கை என்றே கருதவேண்டும்.

அதாவது வரவேண்டிய நிர்ப்பந்தத்தைத் தோற்றுவித்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும். ஏனெனில் போராளியைக் கைது செய்யக் காரணம் எதுவுமில்லை.

அது மட்டுமன்றி குயிலின்பன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது திட்டமிட்ட செயல் என்பதற்குத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் கட்டைகள் பொல்லுகள் என்பன தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தமையும் மேலதிக பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டிருந்தமையும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் மறைமுக யுத்தத்தில் தீவிரம் காட்டி வந்த ஆயுதப்படைத் தரப்பினர் தற்பொழுது குயிலின்பன உட்படப் போராளிகள் மீது பகிரங்மாக தாக்குதல் நடத்த முன்வந்துளளமையானது ஆயுதப்படைத் தரப்பு விடுதலைப் புலிகள் இயக்கத்தை வலுக்கட்டாயமாக நேரடி மோதலில் ஈடுபடுவதற்குத் தூண்டுவதற்காகவே என அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது.

இதேவேளை, புலிகளின் அரசியல் போராளிகள் மீது தாக்குதலை நடத்துவதன் மூலம் அவர்களின் அரசியல் பணிகளுக்கும் ஆயுதப் படைத்தரப்பு குந்தகம் விளைவிக்க முற்படுவதாகவே கொள்ளமுடியும். அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டு சரத்துக்களை முறித்துக் கொள்ள ஆயுதப்படையினர் தயாராகிவிட்டதாகவே இதன் அர்த்தம் உள்ளது.

ஆயுதப்படைத்தரப்பினர் குயிலின்பன் மீது இத்தகைய மிருகத்தனமான தாக்குதலை மேற்கொள்வதற்கு மேற்கூறப்பட்டவாறு யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு எதிராக தமது செயற்பாட்டை வெளிப்படுத்துவது மட்டுமல்ல இத்தாக்குதலை குயிலின்பன் மீது மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற குறிக்கோளும் இருந்ததாக சுட்டிக்காட்டப்படுகிறது.

ஒரு புறத்தில் குயிலின்பன் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் என்ற நிலையில் அவர் மீதான தாக்குதலானது அரசியல் முக்கியத்துவம் பெற்றதாகிறது. அத்துடன் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் மீதான தாக்குதலாக இது கொள்ளப்படும். இதனால் அரசியல் ரீதியில் முதன்மைப் பட்டதாகிறது.

இரண்டாவதாக குயிலின்பனின் நடவடிக்கை குறித்த குரோதமும் காரணமாக இருக்க வாய்ப்புண்டு. ஏனெனில் குயிலின்பன் தாக்கப்பட்டதற்கு இருதினங்களுக்கு முன்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சட்ட ஆலோசகர் வில்லாயாபுடனான சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தில் கருணா குழுவினர் எனக் கூறிக்கொண்டு இராணுவ புலனாயவுத்துறையினரே படுகொலைகளைச் செய்வதாகக் குயிலின்பன் குற்றஞ்சாட்டியிருந்தார் என்பதும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பொறுமைக்கும் எல்லையுண்டு, புலிகளைச் சீண்டிப் பார்க்க வேண்டாம் எனப் பல தடவை எச்சரித்த போதும் இதற்கு அரசாங்கத் தரப்பில் இருந்து சாதகமான பதிலில்லை. மாறாக ஆயுதப்படைத் தரப்பின் இத்தகைய நடவடிக்கைகளே வெளிப்படுத்துவதாகவுளளது.

இது யுத்தம் ஒன்றைச் செய்ய அரசாங்கம் தயாராகி வருகிறது என்பதையே உணர்த்துவதுபோல் உளளது என அவர்கள் மேலும் சுட்டிக் காட்டினார்கள். (க)

# மல்லாவி பூவரசன் குளத்தில் பொது நோக்கு மண்டபம் திறப்பு

(கிளிநொச்சி)

மல்லாவிப் பிரதேசத்திலுள்ள பூவரசங்குளக் கிராமத்தில் பொது நோக்கு மண்டபம் ஒன்றினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்துள்ளது.

நண்பகல் 12.00 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட மல்லாவிப் பிரதேச பூவரசங்குளக் கிராமத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ள இப்பொது நோக்கு மண்டபமானது, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனும், நெக்கோட் திட்டத்தின் அனுசரணையுடனும் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் பாண்டியன்குளம் துணுக்காய் அபிவிருத்தி நிறுவனத்தினால் (PTDO) நிறுவப்பட்டுள்ளது.

பு,வரசங்குளக் கிராம மக்களின சமூக, பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு நிறுவப்பட்டுள்ள இப்பொதுநோக்கு மண்டபத் திறப்புவிழாவிற்கு சமூக பொருளாதார் அபிவிருத்திச் சங்கத் தலைவர் மகேஸ்வரன் தலைமை தாங்கினார்.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரேற்றல் , மங்கள விளக்கேற்றல் என்பன இடம்பெற்றன. பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார். மங்கள விளக்கினை பூவரசங்குளக் கிராம அலுவலகர் பொன்னுத்துரை, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நெக்கோட் திட்ட சமூக உணர்வூட்டாளர் செல்வி. ரூபா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனையடுத்து தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ராமமூரத்தி ஏற்றிவைத்ததையடுத்து பாண்டியன்குளம் துணுக்காய் அபிவிருத்தி நிறுவனக் (PTDO) கொடியினை அதன் நிர்வாக அலுவலர் செல்வி மைதிலி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஆசியுரையினை முல்லைத்தீவு மாவட்ட திட்ட இணைப்பாளர் பரமானந்தமும், வரவேற்புரையினை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் நடராஜாவும் சிறப்புரைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ரீகனும் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தனும் ஆற்றியிருந்தனர்.

இத்திறப்புவிழா நிகழ்வில் பூவசரசங்குளக் கிராம மக்கள், போராளிகள எனப் பெரும்பாலானோர் கலந்து சிறப்பித்தனர். (க)

# நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை பூகோள பேண் தகுமை வியாபகத்தின் இயக்குநர் ஆர்.அருட்பிரகாசம் எழுதிய 'பணச் சுரண்டல்' (Monetary Exploitation) நூல் அறிமுகவிழா இன்று பிற்பகல் 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில நடைபெறவுள்ள இந் நிகழ்வில் நூல் அறிமுகவுரையை யாழ்பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார். (08)

## இன்று ஒரு தகவல்

# படிப்பும் பண்பாடும்

ஒரு ஊரில் சோமநாதன் என்று ஒரு பெரியவர் இருந்தாராம். அவர் மிகவும் நல்ல மனிதர். அவரிடம் பணம் இருந் தது. அத்துடன் குணமும் இருந்தது. இது ரொம்ப அபூர்வம் தானே. அவர் தர்ம சிந்தனை உள்ளவர். நாலு பேருக்கு தன்னால் முடிந்ததை செய்ய வேண்டுமென்று நினைக்கின் றவர்.

அவர் ஒருநாள் என்ன செய்தார் என்றால்... இரண்டு பண்டிதர்களை வீட்டுக்கு அழைத்து, அவர்களைக் கௌரவித்து விருந்து கொடுக்க வேண்டுமென்று நினைத்தார்.

ஞானபண்டிதர் என்று ஒருவர், ராமபண்டிதர் என்று ஒருவர். அவர்கள் இரண்டு பேரையும் பார்த்து "ஒரு நாளைக்கு எனது வீடுக்கு விருந்துக்கு வரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அவர்களும் சரி என்று ஒத்துக் கொண்டார்கள். ஒருநாள் இருவரும் அவருடைய வீட்டுக்கு வந்தார்கள.

இந்தப் பெரியவர் அவர்கள் இருவரையும் மிகவும் அன்பாக வரவேற்றார். அழைத்து உட்கார வைத்தார். விருந்துக்கும் ஏற்பாடு செய்தார்.

அதற்குள், அந்த இரண்டு பண்டிதர்களிலே ஒருவர், நான் முதலில் குளித்துவிட்டு வருகிறேன் என்று புறப்பட்டார். அவர் குளிக்கப் போனதும், உட்கார்ந்திருந்த மற்றைய பண்டிதரிடம் சோமநாதன் பேச்சுக் கொடுத்தார்.

"என்னங்க! இப்போ குளிக்கப் போனாரே உங்கள் நண்பர் ஞானபண்டிதர்...அவர் பெரிய வித்துவான்- தத்துவஞானி அப்படியென்று ஊர் உலகமெல்லாம் பேசிக் கொள்கிறார்களே" என்றார். அப்படி அவரைப் புகழ்ந்து பேசியதை இவரால் சகித் துக்கொள்ள முடியவில்லை.

"ஊர் உலகத்துக்கு அவரைப் பற்றி என்ன தெரியும்? அவர் ஒரு பெரிய வித்துவான் என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு அவரிடம் என்ன இருக்கிறது? ஒன்றுமேயில்லை! எல்லாம்·வெறும் வேஷம். உண்மையைச் சொல்லப் போனால் அது ஒன்றும் தெரியாத மாடு!" அப்படியென்று பொரிந்து தள்ளினார்.

அந்தப் பெரிய மனிதன் இவர் இப்படி செல்வார் என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. மனம் நொந்து போய் பேசாமல் உட்கார்ந்திருந்தார். சிறிது நேரத்தில் குளிக்கப் போன ஞானபண்டிதர் திரும்பி வந்தார். அவர் வந்ததும் ராம பண்டிதர் குளிக்கப் புறப்பட்டார். அவர் போன பிற்பாடு ஞான பண்டிதரிடம் பேச்சுக் கொடுத்தார் சோமநாதன்.

"என்னங்க, உங்கள் நண்பர் பெரிய ஞானி போல இருக்கிறாரே" என்றார். இதைக் கேட்டதும் அவர் முகம் வாடிப்போனது. "யாருங்க ஞானி? அவரா ஞானி? அவரைப் பற்றி உங்க ளுக்கு ஒன்றும் தெரியாது போல இருக்கிறது. அது ஒரு மோசமான கழுதை" என்றார். இதைக் கேட்டதும் அந்தப் பெரிய மனிதன் மேலும் நொந்து போனார். பதில் எதுவும் சொல்லாது பேசாமல் இருந்தார். சாப்பாட்டு நேரம் வந்தது. குளிக்கப் போயிருந்தவரும் வந்து சேர்ந்தார். அந்தப் பெரியவர் இவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்தார். அவர்களுக்கு முன்னால் இரண்டு தட்டை வைத்தார். ஒரு தட்டில் புல், ஒரு தட்டில் தவிடு... எடுத்துக் கொண்டு வந்து வைத்தார்.இதைப் பார்த்தவுடன் அந்தப் பண்டிதர்களுக்கு கோபம் வந்துவிட்டது.

"எங்களை என்ன மிருகங்கள் என்று நினைத்து விட்டீர்களா? எங்களை இப்படி அவமானப்படுத்துவ தற்காகவா உங்கள் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தீர்கள்?" என்று சொல்லி சத்தம் போடத் தொடங்கி விட்டார்கள்.

"அய்யய்யோ! அப்படியெல்லாம் நினைத்து விடாதீர்கள் நீங்கள் இரண்டு பேரும் பெரிய பண்டித மணிகள்... உங்கள் வார்த்தைக்கு மரியாதை கொடுத்தேன். அவ்வளவுதான்!

நீங்கள் தான் அவரை மாடு என்றீர்கள். அவர்தான் உங்களைக் கழுதை என்றார். மாடும் கழுதையும் என்ன சாப்பிடுமோ அவற்றைத்தான் உங்கள் முன் வைத்தேன். முதலில் நான் உங்களை பண்டிதர்கள் என்று நினைத்துத்தான் விருந் துக்கு ஏற்பாடு செய்தேன்.

நீங்கள் இங்கு வந்தபிறகுதான் நீங்கள் யார் என் பதை உங்கள் மூலமாகவே அறிந்து கொண்டேன். அதற்குப் பிறகு தான் உங்களுக்குத் தகுந்த மாதிரி யான விருந்தை ஏற்பாடு செய்தேன் அவ்வளவு தான்" என்றார்.

இந்த உலகில் நாமெல்லாம் அதிகம் படித்துவிட்டால் மட் டும் போதாது. பண்பாடும் வேண்டும். அது தான் மிக முக் கியம். அதைப் புரிந்து கொள்ளவே இந்தக் கதை.

இப்போதும் எம்மிடையே பலரால் அடிக்கடி மிருகங்களைத் தொடர்புபடுத்தி பேசாமல் இருக்க முடிவதில்லை.

இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டார்கள். "உன்னுடன் நான் நட்புக் கொண்டதற்குப் பதிலாக ஒரு எருமை மாட்டுடன் நட்புக் கொண்டிருக்கலாம்" என்றான் ஒருவன். "கொண்டிருக்கலாம்! ஆனால் அதற்கு எருமை மாடு சம்மதிக்க வேண்டுமே!" என்றான் மற்றவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# குவேனி உள்ளிட்ட மூவர் மீதான கொலை முயற்சி விசாரணைகள் முடியவில்லை

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ குணபால

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் கொலை முயற்சி தொடர்பான விசாரணைகள் இதுவரை பூர்த்தியடைவில்லை என அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ குணபால, ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

01.02.05 - 02.03.05 வரையிலான காலப்பகுதியில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னணி பற்றி ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த போது இதனை அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதனை தலைவராகக் கொண்ட ஆணைக்குழுவின் விசாரணை கடந்த திங்கள் முதல் புதன் வரை அம்பாறை நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. சாட்சி தொடர்ந்து சாட்சியமளிக்கையில், இந்த சம்பவம் தொடர்பாக விசேட அதிரடிப் படையினரிடம் தஞ்சம் பெற்ற ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை அடையாள அணிவகுப்பில் நிறுத்துவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாட்சிகளான சம்பவத்தில் காயமடைந்த மூவரின் வாக்குமூலங்களைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதங்களினால் அடையாள அணிவகுப்பிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்தை அறிந்து அந்த இடத்திற்கு வந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் புவிராஜ், குமார், குகன், வெள்ளையன், ரமேஸ் ஆகியோரின் வாக்குமூலங்களையும் பெற வேண்டியுள்ளது.

இது தொடர்பாக அம்பாறை மாவட்டத்திலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் விடுவிக்கப்படாத பகுதிக்குச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களது வாக்குமூலத்தையும் பெற முடியவில்லை. தற்போது கொழும்பில் அப்பலோ வைத்தியசாலையில் தொடர்ந்தும் அனுமதிக்கப்பட்டுள்ள சசிமதி என்பவரின் வாக்குமூலத்தைப் பெற பல தடவைகள் முயன்ற போதிலும் அது சாத்தியப்படவில்லை. குற்றவியல் சட்ட விதிகளுக்கு அமைய நீதிமன்ற உத்தரவு பெற்று அவரதுவாக்கு மூலம் பதிவு செய்யப்படவிருக்கின்றது.

சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியொருவர் அடையாள அணிவகுப்பில் சந்தேக நபரை நேரடியாக அடையாளம் காட்ட முடியாது என்றும் தன்னால் மறைந்திருந்து தான் காட்ட முடியும் என தெரிவித்துள்ளதால் இதற்கு நீதிமன்றத்தின் அனுமதி பெற வேண்டியிருக்கின்றது என்றார். (க)

# இனங்காணப்படாத மர்ம நோய் மேலும் பத்து மாணவரை தாக்கியது

(பதுளை)

பதுளையில் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ள இனங்காணப்படாத புதிய நோய்க்கு மேலும் பத்து மாணவர்கள் இலக்காகியுள்ளனர்.

பதுளை ஊவா பரணகம மஸ்பன்ன சிங்கள மகா வித்தியாலயத்தின் உப அதிபரும் இரு மாணவர்களும் இனங்காணப்படாத இந் நோயினால் ஏற்கனவே இறந்துள்ளனர்.

இதனையடுத்து மேற்படி பாடசாலை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

இந்த இனங்காணப்படாத நோயினால் பீடிக்கப்பட்ட மேலும் பத்து மாணவர்கள் வெவேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெவேகம மாவட்ட வைத்திய அதிகாரி சுசந்த காரியவசம் தெரிவித்திருக்கிறார்.

மயக்கமுற்ற நிலையில் பாடசாலையின் உப அதிபரும் இரு மாணவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே இறந்துள்ளனர்.

பாடசாலையின் உப அதிபர் ஆர்.எம்.குணபால மற்றும் தனுஷ்க சத்துரங்க (வயது-16) சனத் பிரேமசிறி (வயது-16) ஆகியோரே இவ்வாறு மரணமடைந்துள்ளவர்களாவர்.

இந்த மூவரினதும் மரணம் குறித்து வெவேகம மாவட்ட வைத்திய அதிகாரி சுசந்த காரியவசம் தொடர்ந்து தெரிவிக்கையில்,

குறித்த பாடசாலையைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை சுய நினைவை இழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் மாணவனின் நோய் குறித்து ஆராய முன்பே அவர் மரணமாகிவிட்டார். மாணவன் இறக்கும் போது அவரின் கண், உடல் என்பன மஞ்சள் நிறமாகக் காணப்பட்டதுடன் ஈரலும் வீங்கியிருந்தது.

இந்நோயால் மரணமடைந்த மூவருமே மயக்கமுற்ற நிலையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்றார்.

இந்த இனங்காணப்படாத நோய் குறித்து ஆராய்வதற்கென இறந்தவர்களின் உடற்பாகங்கள் மற்றும் பாடசாலைக்கு விநியோகிக்கப்படும் நீரின் மாதிரி என்பன பேராதனை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த இனங்காணப்படாத நோய் குறித்து ஆராய்வதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தொற்றுநோய் பிரிவைச் சேர்ந்த இரு வைத்திய குழுக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை ஊவா பரணகமவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-9)

# டெங்குக் காய்ச்சல் மீண்டும் பரவும் அபாயம்

(கொழும்பு)

எதிர்வரும் மாரிகாலத்தின் பின்னர் டெங்குக் காய்ச்சல் மீண்டும் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை வீடுத்துள்ளது.

இது தொடர்பாக விசேட கவனம் செலுத்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டு இணைப்புப் பிரிவொன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலக்க தெரிவித்திருக்கிறார்.

நிபுணத்துவ வைத்தியர் ஒருவரின் தலைமையில் இது செயற்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதன் கீழ் டெங்குக்காய்ச்சல் தொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்த டாக்டர் நிஹால் ஜெயதிலக்க, சூழலை அசுத்தமாக வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார். (7-9)

# நிர்வாகிகள் தெரிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் நிர்வாகிகள் தெரிவும் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இதில் புங்குடுதீவு கல்வி அபிவிருத்திக்கான கழகத் தலைவராக கா.குகபாலனும், செயலாளராக பேரின்பநாதனும், பொருளாளராக நா. பஞ்சலிங்கமும்,உபதலைவராக எஸ்.கே.சண்முகலிங்கமும், உப செயலாளராக தர்மகுணசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

கழகத்தின் உறுப்பினர்களாக க.கலைநாதன்,அ.கருணாகரன், வெ.செபமாலை, கை.ஸ்ரீஸ்காந்தன், ப.விநாயகமூர்த்தி, ந.இராசதுரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-126)

# அனர்த்தம் குறித்த பிரேரணைகள் இத்தாலிய அரசினால் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தேசிய அனர்த்தங்கள் தொடர்பிலான பிரேரணைகள் இத்தாலிய அரசாங்கத்தினால் பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் சுனாமி அனர்த்தத்தால் சகல பிரதேச மக்களும் இடம்பெயரவேண்டியதில்லை. இத்தாலிய அரசாங்கத்தின் பிரேரணைகள் உத்தியோகபூர்வமாக பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் மஹிந்த சமரசிங்கவிடம் இத்தாலிய தூதுவர் செல்வரோர் ஷோட்டாவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இப்பிரேரணைகளில் இத்தெரிவுக்குழுவில ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்களும் அடங்கியுள்ளன.

இதன்மூலம் அரசாங்கத்தினை நல்லதொரு நிலைக்கு அவர்கள் இட்டுச்செல்வார்கள் என மஹிந்த சமரசிங்க தெரிவித்ததுடன் இத்தாலிய தூதுவரிடம் நன்றியும் கூறினார்.

மேலும் இத்தாலிக்கு இலங்கை 7.3 மில்லியன் யூரோக்களை கடனாக செலுத்த வேண்டும். இதுபற்றி நிதியமைச்சரும் அறிந்துள்ளார் என்றும் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அத்துடன் சகலவிதமான அனர்த்தங்களுடனும் கையாளும் இத்தாலி நன்கு அனுபவம் வாய்ந்தது.

இந்தப் பிரேரணைகள் இத்தாலியின் 4 பல்கலைக் கழக பேராசிரியர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது.

பல தேசிய அனர்த்த நிபுணர்களும் இணைந்தே தயாரித்துள்ளனர்.இவர்கள் பாராளுமன்ற தெரிவுக்குழு அங்கத்தவர்களுடனும் பெரதெனிய, மொரட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர்கள், விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண ஆகியோருடன் பேச்சுக்களை நடாத்தியிருந்தனர். (க-6)

# குடியிருப்புக்களை அகற்றி மைதானத்தை விஸ்தரிக்கும் முயற்சி மனிதஉரிமை மீறல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரியின் மைதானத்தை விஸ்தரிப்பதற்காக கல்லூரியை அண்மித்துள்ள குடியிருப்புக்களை அகற்ற முயற்சிப்பது மனித உரிமை மீறல் எனக் கூறி சம்பநதப்பட்ட பகுதிப் குடியிருப்பாளாகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளனர்.

யாழ்.இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும், நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து கல்லூரி மைதானத்தை சூழவுள்ள குடியிருப்புக்களை அகற்றி மைதானத்தை விஸத்தரிப்பதற்கான நடவடிககையில் ஈடுபட்டுள்ளதாகவும பரம்பரை பரம்பரையாகத் தமது நிலத்தில் வாழ்ந்துவந்த தம்மை எழுப்புதவற்கு முயற்சிப்பது மனித உரிமை மீறல் எனவும் குறிபபிட்டு மைதானத்தை சூழவுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 33 அங்கத்தவர்கள் ஒப்பமிட்டு நேறறு முன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

மேலும் அம்முறைப்பாட்டில் நல்லூர் பிரதேச செயலகத்தினால் நில அளவையியலாளர்களை அனுப்பி தமது நிலங்கள் அத்துமீறி அளக்கப்பட்டதாகவும் இது சம்பந்தமாகக் காணி அமைச்சுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தமது காணிகளை அங்கீகரிப்பதற்கு தாம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என காணி அமைச்சா் கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவினால் துரித நடவடிக்கை எடுக்கப் பட்டுவருகிறது.

(க-19)

# தீக்குளிர்ச்சி உற்சவம்

(இணுவில்)

ஏழாலை மத்தி அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலயம் வருடாந்த பங்குனி உத்தர தீக்குளிர்ச்சி உற்சவம் எதிர்வரும் 1ஆம் திகதி திங்கட்கிழமை மதியம் 12.30மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அத்துடன் அன்னதானமும் அன்றைய தினம் இடம்பெறும்.

இதேவேளை, இவ் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத்திருவிழா உற்வசமும் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெற்று 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(7-122)

# அழிவுப்பாதையில் செல்லும் நாட்டை மீட்டு எடுக்கமுடியாது -ஜீ.எல்.பீரிஸ்

(கொழுமபு)

நாடு அழிவுப்பாதையில் செல்கின்றது. அதனை இனிமேல் மீட்டெடுக்க முடியாது என ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சரியான ஆட்சிமுறை, முறையான நிர்வாகம் இல்லாமை, மககளின் பிரசசினைகளுக்குத தீர்வு, இலங்கைவாழ் மக்கள் உட்பட சர்வதேச நாடுகள் அனைததும் எதிர்பார்க்கும் இனப்பிரச்சினைத்தீர்வு என்பவற்றுக்கு எவ்வித முடிவுகளும் இல்லாது காலத்தை இழுத்தடித்து வருவதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையும், கடைப்பாடுமாகும்.

இதனாலேயே நாடு என்றுமில்லாஅளவிற்கு மோசமான நிலையையும், ஏனையோர் கேலிசெயயக்கூடிய நிலையையும் அடைந்துள்ளது என நேற்று முன்தினம கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் அவசர அவசரமாக சர்வஜன வாக்கெடுப்புக்காகத் தயாராகிக் கொண்டிருககின்றது. இது தனி ஒருவருடைய தேவைக்காகவே முன்னெடுக்கப்படவிருக்கின்றது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென எவ்வளவோ நிதிகிடைத்திருக்கின்றது. அவை கிடைக்கவில்லை என ஜனாதிபதி தெரிவிக்கின்றார். இது எந்தவகையில் நியாயமானதாகும். அவ்வளவு பணத்தையும் வைத்து ஜனாதிபதி என்ன செய்யப் போகின்றார், மக்களை ஏமாற்றுவது என்பது ஜனாதிபதிக்குக் கைவந்த கலையாகிவிட்டது.

ஆனால் எம்மையும் குறிப்பாக விடுதலைப் புலிகளையும் அரசால் ஏமாற்ற முடியாது. கைப்பொம்மையாகச் செயற்படும் ஜே.வி.பியினரையும், நீங்கள் தான் எல்லாம் என ஜனாதிபதியின் பின்னால் இழுபடும் அமைச்சர்களுமே ஜனாதிபதியின் ஏமாற்று வேலைக்கு ஒத்திணைவார்கள்.

நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தாலும் நாட்டின் •முன்னேற்றத்துக்காகவும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவும் அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிப்போம் என்றார்.

இதேவேளை, அரசாங்கத்தின் சீரின்மையை வெளிக்காட்டும் வகையில் அமைச்சர் அமரசிறி தொடங்கொட மற்றும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோப்பிள்ளை ஆகியோர் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள அமைந்திருந்ததாக ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

(க-4)

# திறைசேரியில் முறைகேடு; விசாரணைசெய்ய குழு நியமிப்பு

(கொழும்பு)

திறைசேரியில் கடந்த காலங்களில் நடைபெற்றதாகக் கூறபபடும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமாபபிக்க விஷேட விசாரணக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

திறைசேரித் திணைக்களம் தொடர்பாக முறைப்பாடுகள், ஆலோசனைகள் இருந்தால் அதுகுறிததுத் தெரிவிக்க பொது மக்களுக்கு வாய்ப்பளிப்பதே இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டதன் நோக்கமென்று மக்கள் பாதுகாப்புத் தொடர்பான அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார். இந்த விசாரணைக்குழுவுக்கு எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் முறைப்பாடுகளையும் ஆலோசனைகளையும் தெரிவிக்க முடியும். இந்த விசாரணைக் குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் வடமத்திய மாகாண முன்னாள் ஆளுநருமான பி.எஸ்.சமரவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

(க-8)

## வருடாந்த அலங்கார உற்ச்வம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று மாலை 4.00மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகிறது.

9ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 11ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (7-39)

# சமாதானச் சூழலை பெற்றுக்கொள்ள 17 ஆயிரம் மாவீரர்களை இழந்தோம்

## மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி தெரிவிப்பு

(பொன்னாலை)

ஒரு நிரந்தர சமாதான சூழலைப் பெறுவதற்கு பதினேழாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களை நாம், இழந்திருக்கின்றோம். இந்தச் சமாதான காலத்திலும் எமது போராளிகள் மீதான படுகொலைச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. எம்மைச் சீண்டுவதன் மூலம் இந்தச் சமாதானச் சூழலைக் குலைத்துவிடலாம் என்பதே எதிரிகளின் எண்ணமாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் யோ.கலைவிழி.

கிழக்கு மாகாணம் புலிபாய்ந்த கல் என்ற இடத்தில் வைத்து வெட்டிப்படுகொலை செய்யப்பட்ட கோப்பாய் தெற்கைசசேர்ந்த லெபடினன்ட் இசைமாறனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொணடு அஞ்சலியுரை நிகழ்த்தும்போதே கலைவிழி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில், கல்லூரி அதிபர் எஸ்.சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்ற இசைமாறனின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் தொடர்ந்து பேசிய அவர்,

மீளாத் துயில் கொண்டிருககும் மாவீரன் இசைமாறன்- ஒரு காலத்தில் இக்கல்லூரியின் மாணவனாக இருந்து கல்வி கற்றவன். இந்தப பாடசாலை மைதானத்திலே ஏனைய மாணவர்களோடு ஓடியாடி விளையாடித் திரிந்தவன். இனவாத அரசினதும் அதன் இராணுவத்தினதும் அடாவடித்தனங்களைக கண்டு கொதித்தெழுந்த இசைமாறன், விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னையும் ஒரு போராளியாக மாற்றிக்கொண்டான்.

இன்று நாம் நின்று கொண்டிருக்கும் சமாதான காலம் என்பது எமது தேசத்தில் அடித்தளம் ஒன்றைப் பலமாக ஏற்படுத்துகின்ற காலமாக இந்த இசைமாறனும் உங்களது எதிர்கால வாழ்வுக்காக தன்னுயிரைத் தியாகம் செய்திருக்கின்றான்.

தற்காலத்தில் எமது மக்கள் அடக்குமுறை இராணுவ சக்திகளுக்கெதிராக வீதிகளில் இறங்கி அடிக்கடி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவை எழுச்சி கொண்ட ஒரு இனத்தின் உணர்வுகள என்றே கூறவேண்டும். அது மட்டுமல்ல இப் போராட்டங்கள் எமது விடுதலையை விரைவுபடுத்த உதவுவதோடு, எமது மக்களின் புதிய வாழ்வுக்கும் அத்தியாயமாக அமையும்.

எமது தலைவரின் வழியில் நாம எல்லோரும் அணிதிரண்டு சமாதான சூழலை நல்ல முறையில் பயன்படுத்த் வேண்டும. எதிரியானவன் திட்டமிட்டு குழப்பங்களை ஏற்படுத்துவதன் ஊடாக அம்முயற்சிகளை முறியடிக்கலாம் என்று எண்ணுகின்றான்.

இறப்பு என்பது பயங்கரமானது. அதை யாருமே விரும்ப மாட்டார்களள. இருந்தாலும் எமது விடுதலைப் போராட்டத்திற்காக விலை மதிப்பற்ற எத்தனையோ உயிர்களைத் தியாகம் செய்திருக்கின்றோம்.

இங்கு கூடியிருக்கும் அனைவரும் இந்த சாதாரண வாழ்வில் இருந்துகொண்டு சிந்தித்துப் பார்க்கையில் எவ்வாறு இவன் ஒரு விடுதலை வீரனானான்? இவனைத் தூண்டிய காரணிகள் என்ன? என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். தன்னுடைய இழப்பினூடாக இந்தத் தேசத்திற்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை இந்த வீரன் ஏற்படுத்தித் தந்திருக்கின்றான்.

இந்த விடுதலைப் போராட்டத்தை எவ்வாறாயினும் சிதைத்து விடுவோம் என்ற நோக்கில் எப்பொழுதும் திட்டமிட்டே செயற்பட்டு வருகின்றனா். ஆனால இந்த விடுதலைப் போராட்டத்தை அவர்கள் நினைப்பது போன்று விரைவில் அழித்து விட முடியாது. மாறாக எமது போராட்டம் விரைவுபடுத்தப்பட்டு விடுதலை வென்றெடுக்கப்படும் என்றார்.


(7-49)

# மீனவர் கூ.ச.சமாசத்துக்கு கடற்புலிகள் நிதியுதவி



தங்கேஸ்வரி கதிர்காமர் எம்.பி. நிதியை துரைராசாவிடம் கையளிக்கும் போது உடனிருப்பவர்கள் இலக்கியன், ஜெயானந்தமூர்த்தி எம்.பி., பி.அரியநேத்திரம் எம்.பி.

அம்பாறை மாவட்ட மீனவர் கூட்டுறவுச்சங்க சமாசத்துக்கு கடந்த வியாழக்கிழமை எட்டு இலட்சம் ரூபாவை கடற்புலிகளின் அரசியல் பிரிவு அன்பளிப்பாக வழங்கியது. இந்நிதி திருக்கோவிலில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் அலுவலகத்தில் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி கதிர்காமரினால் சமாசத்தலைவர் இளையதம்பி துரைராஜாவிடம் கையளிக்கப்பட்டது.




பெற்றோல் தட்டுப்பாடின்றிக் கிடைத்தாலும் யாழ்.நகரில் பெற்றோலை வாங்குவதற்காக முண்டியடித்துச் செல்லும் மக்களைப் படத்தில் காணலாம். (படம்:- திலீப்)

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் - குறள்

வலம்புரி

# நாட்டைச் சீரழிக்கும் அரசியல் தலையீடு

அரசியல் என்பது தனது வரையறைகளைக் கடந்து செல்லுமாயின் அதன் விளைவு மிக மோசமானதாகவே அமையும்.

இந்த நிலைமையே இலங்கையில் காலாகாலமாக நிலவுகின்றது. நாட்டிற்கென ஓர் பொதுவான பொருளாதார கொள்கையின்மை மிகப் பெரும் குறைபாடாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளை எடுத்து ஆராய்ந்தால் இந்த நாடுகள் நிலையான பொருளாதார கொள்கைகளை கடைப்பிடிக்கின்றன. கொள்கைகளில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதாயின் அதற்கு அங்குள்ள அனைத்து அரசியல் அமைப்புகளினதும் ஒப்புதல் பெறப்படும்.

ஒப்புதல் அளித்தல் என்பது நாட்டின் எதிர்கால அபிவிருத்தி பற்றி ஆராயப்படுமே அன்றி அரசியல் இலாபம் என்ற பேச்சுக்கு அங்கு இடமிருக்காது. இதனால் அந்த நாடுகள் மென்மேலும் விருத்தியடைந்து செல்கின்றன.

ஆனால், இந் நிலைமை இலங்கையில் அறவே இல்லை எனலாம். இங்கு நாட்டின் எதிர்காலம் என்பதற்கு அப்பால், அரசியல் எதிர்காலம் பற்றிய சிந்தனையே மேலெழுந்திருக்கும். இதனால் நாட்டிற்கு உகந்த பொருளாதாரக் கொள்கைகள் அரசியல் இலாபம் கருதி நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

தத்தம் கட்சிகள் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில் அரசியல் பொருளாதார கொள்கைகளை நிர்ணயிக்கின்றபோது அந்த நாடு உருப்படும் வாய்ப்பை இழந்துவிடுகின்றது.

இதற்கு கலாநிதி என்.எம். பெரேரா கொண்டு வந்த மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையும் அந்த கொள்கையை முறியடிக்கும் வகையில் ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டுவந்த திறந்த பொருளாதாரக் கொள்கையும் நல்லதோர் உதாரணமாகும். இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் அக்கறை கொண்ட எவரும் மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையையே ஆதரிப்பர். இந்த விடயம் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கு தெரியாததல்ல.

இருந்தும் ஆட்சிப் பீடத்தை அபகரிக்கும் சூழ்ச்சியாகவே திறந்த பொருளாதாரக் கொள்கையை அவர் முன்வைத்தார். இதன் காரணமாக இலங்கை தனது உள்நாட்டு உற்பத்தியில் இருந்த இறைமையை இழந்துபோனது. இதன் விளைவே விவசாயத் துறையிலிருந்து இளைஞர்கள் விலகிச் செல்ல வழிவகுத்தது. இன்று நாட்டின் உற்பத்தி வளங்கள் வீணாக்கப்பட்டிருப்பதற்கு இதுவே காரணமாகும்.

இத்தகைய அரசியல் தலையீடுகள் நாட்டை குட்டிச் சுவராக்கிவிட்டன. பொருளாதாரம் முதல் கல்வி, மருத்துவம், அறிவியல், தொழிநுட்பம் என பல்துறைகளிலும் அரசியல் தலையீடு ஏற்பட்டுவிட்டது. இதனாலேயே அரச அமைப்புகளை தனியார் மயப்படுத்த முற்படுகின்றபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த எதிர்ப்புக்கும் பின்னணியில் ஏதோ ஓர் அரசியல் கட்சி இருப்பதை அறியமுடியும்.

இதனால் இலங்கையில் பொருத்தமான எந்த முறைமையையும் அமுல்படுத்தமுடியாமல் போகின்றது. ஆக புத்திஜீவிகள் சேர்ந்து நாட்டின் எதிர்காலத் திட்டமிடல்களை ஒழுங்குபடுத்தாமல் இருக்கும் வரை - அவை அரசியல்வாதிகளின் அறியாமைக்குள் கிடக்கும் வரை நாட்டின் அபிவிருத்தி சாத்தியப்படுவது கடினமே.

# பொதுக் கட்டமைப்பின் உருவாக்கம் இனப் பிரச்சினை தீர்வுக்கு வழி கோலும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்த நிவாரணம் தென்பகுதி மக்களுக்கு மட்டும் கிடைக்காமல் வடக்கு-கிழக்குப் பகுதி மக்களுக்கும் எவ்வித பாகுபாடுமின்றி வழங்கப்படவேண்டும் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் கடந்த புதனன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார். அரசாங்கமும் தமிழீழவிடுதலைப் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பினை விரைவில் உருவாக்கவேண்டும் எனக் குறிபபிட்ட அவர், இதனூடாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு உரிய நிவாரணங்கள் விரைவாக வழங்கப்படுவதற்கு வழி ஏற்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஏனவே விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளுக்கு இணங்கி பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்துவதற்கு அரசுகைகொடுக்க வேண்டும் இதன் மூலம் இனப்பிரச்சினை தீர்வுக்கு வழி கோல முடியும்.எனவே அரசானது தனது பொறுப்பற்ற நடவடிக்கைகளை குறிப்பாக சர்வஜன வாக்கெடுப்பினை நடாத்துவது இன்னொரு தேர்தலை நடத்துவது போன்ற தேவையற்ற செயல்களை கைவிட்டு மக்களின் தேவையினை நிறைவு செய்யும் வகையில் பொதுக்கட்டமைப்பினை விரைவில் உருவாக்க வேண்டும் என அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

(7-4)

# உலக உணவுத்திட்ட நிவாரணத்தில் உள்ளூர் அரிசியும் வழங்கப்படும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலக உணவுத்திட்ட அமைப்பினூடாக வழங்கப்படும் உதவிகளில் உள்ளூர் அரிசி பகிர்ந்தளிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியே பகிர்ந்தளிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் அமோகநெல் விளைச்சல் காரணமாக இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக நிவாரண புனர்நிர்மாண, புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜெயசிங்க தெரிவித்திருக்கிறார்.

முதற்கட்டத்தில் இதற்கென 10 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி கொள்வனவு செய்யப்படும் இதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

பெரும்போக அறுவடைநெல் கூட்டுறவு அமைப்புக்கள் மூலமாகக் கொள்வனவு செய்யப்படுகின்றது. அதறகாக மாவட்ட செயலாளர்கள் ஊடாக தேவையான நிதி வழங்கப் படடிருக்கின்றது.

இது வரை 87 கோடி ரூபா நெல் கொள்வனவுக்காக வழங்கப்பட்டிருப்பதாகவும் எதிர்காலத்தில் மேலும் பணத்தை கொடுக்க அரசாங்கம் தயாராக உள்ளதாகவும் திறைசேரி அறிவித்துள்ளது.

அதேவேளை பெரும்போக உற்பத்திப் பொருட்கள் சந்தைக்கு வரத்தொடங்கியிருப்பதால் அரிசியின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(7-9)

# பத்து ஆட்கொணர்வு வழக்குகள் நேற்று நீதிமன்றில் நடைபெற்றது

1996, 1997 ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் குருநகர்ப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல்போன பத்துப் பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரம் முன்னிலையில் நடைபெற்றது.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கால அவகாசம் தரும்படி கோரியதையடுத்து இவ்வழக்கு மே மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(ச-19)

# 'தேச அபிவிருத்தியில் தமிழர் கல்வி' நூல் இன்று வெளியிடப்படுகிறது

'தேச அபிவிருத்தியில் தமிழர் கல்வி' நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றுள்ளது.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாபதி பதி எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் நிகழ்த்தவுள்ளார்.

முதற்பிரதியை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன் பெறவுள்ளார். மதிப்பீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி நிகழ்த்தவுள்ளார். (ச)

# சப்பிரகமுவ மாகாணத்தில் 400 ஆசிரிய வெற்றிடங்கள்

(கொழும்பு)

சப்பிரகமுவ மாகாணத்தில் கோகலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் சுமார் 400 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாக மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு நியமனங்களை வழங்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தகுதியுடைய இளைஞர், யுவதிகள் மாகாணத்தில் இல்லாத பட்சத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து விண்ணப்பதாரிகளை இணைத்துக்கொள்ள நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மொழி மூல பாடசாலைகள் பின்னடைந்துள்ளதால் அந்த நிலையைப்போக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(7-9)

# இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் சட்டரீதியாக ஓய்வு பெற சந்தர்ப்பம்

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு சட்டரீதியாக சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை வழங்கும் நாடு தழுவிய திட்டம் மே மாதம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுவருவதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க தெரிவித்தார்.

இதற்கு முன்னர் மேல் மாகாணம் குருநாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் வசிக்கும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் சட்டரீதியாக விலகுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த சந்தர்ப்பத்தை அதிகளவானோர் பயன்படுத்திக் கொண்டதாகவும் அது வெற்றிகரமாக அமைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் விஸ்தரிப்பதற்கு எதிர்பார்ப்புக்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-9)

# அமெரிக்க வைத்தியர் குழு கிழக்கிற்கு விஜயம்



கடந்த டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலையால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட வடகீழ் மாவட்டத்தைச் சேர்ந்த அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களில் உள்ள பின்தங்கிய நிலையில் உள்ள கிராமங்களை அமெரிக்க மேற்கு வர்ஜினியாவைச் சேர்ந்த டாக்டர் பாற்ச் அடமஸ் 30 பேர் அடங்கிய விதூஷகர் குழுவுடன் விஜயம் செய்தார்.

1998 இல் வெளியான ரொபின் வில்லியம் என்பவரின் 'பாற்ச் அடம்ஸ்' என்ற நகைச்சுவை படம் மூலம் சுகமடைந்தவரான இவர் பாதிப்புக்களை நகைச்சுவை, விகடம் முதலியன மூலம் தீர்க்கலாம் என்பதில் நம்பிக்கையுடையவர் ஆவார்.

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நூறுவருடங்களுக்கு முன்பு மனிதன் நடந்து சென்றான், அல்லது குதிரையில் சென்றான். இப்போது ரயிலில் செல்கிறோம் என்று மகிழ்ச்சியாக இருக்கிறான். ஆனால் அதற்காக அதிக வேலைசெய்து அதிகம் சம்பாதிக்க வேண்டியிருக்கினறதே என்று வருந்தவும் செய்கிறான். வேலையைக குறைக்கின்ற ஒவ்வோர் எந்திரமும் மனிதனின் வேலைப்பளுவை அதிகரிக்கின்றது.

சுவாமி விவேகானந்தர்

# ஊழியர்களுக்கு உரியமுறையில் விடுமுறைகள் வழங்க வேண்டும்

## யாழ்.உதவித்தொழில் ஆணையாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வாரம் ஒன்றிற்கு 45மணித் தியாலங்கள் வேலை செய்த ஒருவருக்கு ஒன்றரை நாட்கள் கட்டாய விடுமுறை வழங்கப்படவேண்டுமென யாழ்ப்பாண உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சில வர்த்தக நிறுவனங்கள் தொழிற்சட்ட நியதிகளை மீறி ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி வருகின்றது. இதனால் தொழிலாளர்களின் நலன்கள் மீறப்படுவதுடன் அவர்கள் பல இன்னல்களுக்கும் உட்படுகின்றனர் என உதவித் தொழில்ஆணையாளர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தொழிற்சட்ட நியதிகளை கருத்திற்கொண்டு வாரஇறுதிநாட்களில் ஒன்றரை நாட்களும் போயா மற்றும்வர்த்தக விடுமுறைகளில் கடைகளை மூடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு 14நாட்களுக்குள் அறிவிக்குமாறு வணிகர் கழகங்களுக்கு உதவித்தொழில் ஆணையாளர் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.இவ்வறிவித்தல் தொடர்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் அ. சுதாஸூக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வாழும் கலைப்பயிற்சி

(யாழபபாணம)

ஸ்ரீஸ்ரீரவிசங்கர் குருஜியின்'வாழும் கலைப்பயிற்சி' இன்று மாலை 6மணிக்கு மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள அரசடி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

18வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாரும் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாமென சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க சனசமூக நிலையத்தினர் கேட்டுள்ளனர். முற்றிலும் இலவசமாக நடைபெறவுள்ள இப்பயிற்சியில். பங்குபற்ற விரும் புவோர் பிற்பகல். 4மணிக்குபதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## ஆலய...

அவர் அணிந்திருந்த 5 பவுண் தாலிக்கொடி 5 பவுண் பெறுமதியான மூன்றுசங்கிலிகள், இரண்டு 4 பவுண் பெறுமதியான ஒரு சோடிகாப்பு என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்றபோது ஆலயத்தினுள்ளேயும் வீதியிலும் எவரும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. கள்வரால் தாக்கப்பட்ட வயோதிபப் பெண் தலையிலும், உடலிலும் படுகாய நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ச-19)

## ஆளில்லாத விமானம் வவுனியாவில் நோட்டம்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று ஆளில்லாத வேவுவிமானமொன்று இரண்டு மணிநேரம் பறந்துள்ளது.

நீண்ட காலத்திற்குப் பின்னர் நேற்று இவ் விமானப் பறந்ததால் மக்கள் பீதியுடன் காணப்பட்டனர்.

வவுனியா ஜோசப் முகாமைமையப் படுத்தி இவ் விமானம் பறப்பில் ஈடுபட்ட தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-4)

## ஐ.ம.சு. கூட்டமைப்பு...

இத்தகவலை அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெ. ஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுனாமி தொடர்பான நிவாரண நடவடிக்கைகளை அரசாங்கம் கையாளும் விதம் குறித்து ஐ.தே.க.மிகுந்த கவலை அடைந்துள்ளது.இதைவிட வடக்கு கிழக்கு மக்களுக்கு கிடைக்கவேண்டிய நிவாரணப்பொருட்கள் உரியமுறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

கோரயுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டெழுந்துள்ள வேளை சுனாமி அனர்த்தம் அவர்களை மீண்டும் பாதாளத்திற்குள் இட்டுச் சென்றுள்ளது.

அவர்களுக்கு கட்டாயமாகவே நிவாரணப் பொருட்கள் அரசினால் வழங்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் அரசு அதைப்பற்றி பேச்சே இல்லாமல் இருக்கிறது. இதற்கெதிராகவும் எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் அமையவுள்ளன.

கூட்டமைப்பு அரசு பதவியேற்று ஒருவருடம் நிறைவடைந்திருக்கும் போதிலும் உருப்படியான எதனையும் செய்யவில்லை. இனப்பிரச்சினைதீர்விற்கோ, நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்வதற்கோ அல்லது முறிவடைந்து போயுள்ளசமாதான முயற்சிகளை தொடரவோ அவர்கள்தவறிவிட்டனர்.

அவர்கள் தவறிவிட்டனர் என்பதனைவிட அதனை வேண்டா வெறுப்பாக எடுத்துக்கொண்டு அதன் மூலம் அரசியல்லாபம் தேட முயல்கின்றனர் எனலாம்.

எம்மிடம் இருந்த ஆட்சியைப் பறித்த ஜனாதிபதி சமாதான முயற்சிக்கோ அல்லது இனப்பிரச்சினைக்கோ தீர்வுகண்டிருக்கலாம். ஆனால் அதில் அவர் அக்கறை காட்டவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

தீர்வுகாணவேண்டிய தருணங்கள் எத்தனையோ கிடைத்தும் அதனை அரசுகைநழுவவிட்டுவிட்டது என்றார். இவற்றை விட சுனாமிப் பேரலையால் பாதிப்படைந்த மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளைக்கையாளுவதில் அரசு பாரிய தோல்வியை அடைந்துள்ளது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் மக்களின் கவனத்துக்குக் கொண்டுவர ஐக்கிய தேசியக்கட்சி திட்டமிட்டுள்ளது.இதன்மூலம் மக்களை விழிப் படையச் செய்து அரசைக் கவிழ்ப்பதே எமது பிரதான நோக்கம் என அவர் மேலும்தெரிவித்தார். (ச-4)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜய், திரிஷா நடித்த




கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

## பதவி வெற்றிடம்

### புத்தகம் கட்டுநர் (பைண்டர்ஸ்) – பெண்கள்

யாழ். நகர மையத்திலிருந்து 5 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் நேரில் வரவும்.

வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

ஆளணி முகாமையாளர்

## கடைகள் திறக்கப்படும்

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களும் இன்று தொடக்கம் எதிர்வரும் 14ம் திகதிவரையுமான சனி,ஞாயிறு மற்றும் வர்த்தகவிடுமுறைதினங்களில் வர்த்தகநிலையங்களை திறந்து வியாபாரம் செய்யலாம் என யாழ்ப்பாணம் வணிகர்கழகம் அறிவித்துள்ளது.

அவ் விடுமுறைதினங்களில் வேலைசெய்யும் ஊழியர்களின் நலன்பேணப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(ச)

## சுதந்திரக்...

ஆகியனவே அவ்யோசனைகளாகும். அரசின்இவ்யோசனைகள் நிறைவேற்றப் படுமாயின்இலங்கை மின்சாரசபை தற்போது இருப்பதைவிட மேலும் நெருக்கடிக்கு உள்ளாகும். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான மானியம் நிறுத்தப்பட்டால் சந்தையில் எரிபொருளின்விலை உடன்டியாக அதிகரிக்கும் எனவும சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
29.03.2005 முதல்
சரத்குமார், நமிதா, வடிவேல் நடிக்க
ஏய்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
குளிரூட்டப்பட்டது
விரைவில் எதிர்பாருங்கள்
ஜெய்ஆகாஷ் நடித்த
குருதேவா

மனோகரா சினிமா
யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி,
மாஸ்டர் அஸ்வின் நடித்த
கண்ணாடிப் பூக்கள்



கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (நீல்ஸ்)

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்



கடவுளை நாங்கள் காணவில்லை
நீங்களே கண்கண்ட தெய்வம்!
நீத்தல் வாழ்வின் முடிவு அல்ல
புதியதொரு புனித வாழ்வின் தொடக்கம்
உங்களுடைய நினைவுகளில்
நாங்கள் வாழ்வதால்
இந்த உலகம் உள்ள வரை
உங்கள் வாழ்வு தொடரும்
கடவுள் உலகில் வாழச் சென்று
இன்றுடன் ஓராண்டு நிறைவு.
அங்கும் அமைதி வாழ்வு வாழும் –எம்
கடவுளையும் நாம் கண்டு விட்டோம்.
துதிப்போம்! துதிப்போம்! துதிப்போம்!

தோற்றம்
16.03.1947

மறைவு
16.03.2004

அமரர்
கந்தையா
தனபாலசிங்கம்

(மின்மாணிவாசிப்பாளர், இலங்கை மின்சாரசபை,
மின் பாவனையாளர் சேவை நிலையம், நகரப் பணிமனை, யாழ்ப்பாணம்)

இங்ஙனம்
குடும்பத்தினர்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.